# BTA
BERGEN TAMILSK AVIS

# தேன்தமிழிதழ்

Bergen Tamilsk Avis,
Krohnegården 5b,
5146 Fyllingsdalen,
Norway.

Org.nr: 926 840 320 - ISSN 2703-8440



ஓவியம்: தேவதாசன் - பிரான்ஸ்

Bergen Tamilsk Avis - no.08 - September 2021 - தேன்தமிழிதழ் - மாதஇதழ் - இல.08 புரட்டாதி 2021

2021 செப்டம்பர் 13ஆம் நாள் நோர்வேயின் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றுள்ளது. 19 தொகுதிகளில் மிகவும் அமைதியான முறையில் சீராக தேர்தல் நடைபெற்றது. 169 பிரதிநிதிகளை மக்கள் ஜனநாயக முறையில் தேர்ந்தெடுத்துள்ளனர்.

2017 இல் நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் 5வெளிநாட்டுப் பின்னணி கொண்ட பிரதிநிதிகள் மக்களால் தெரிவு செய்யப் பட்டிருந்தனர்.

ஆனால் இம்முறை 11 பிரதிநிதிகள் பாராளுமன்றில் தெரிவுசெய்யப் பட்டுள்ளனர். இது நோர்வேயின் அரசியல் வரலாற்றில் பெரு மாற்றம் ஒன்றினை ஏற்படுத்தி உள்ளது.

அதாவது நோர்வேயில் குடியேறிய மக்கள் 11 பிரதிநிதிகள் தேர்வாகியுள்ளமை இங்கே அதிமுக்கிய கவனத்தைப் பெற்றுள்ளது. அத்துடன் அதிகமான பெண் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இது நோர்வே பாராளுமன்ற வரலாற்றில் முதல் தடவையாக நிகழ்ந்துள்ளதாக அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த இரண்டு தடவைகள் நடைபெற்ற தேர்தல்களில் வெற்றி பெற்று எட்டு ஆண்டுகள் நோர்வேயின் வலதுசாரிக் கட்சி ஆட்சி பீடத்தில் அமர்ந்திருந்தது. இவ்வருடம் தொழிலாளர் கட்சி மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது.

நீண்ட கால இடைவேளையின் பின் நோர்வேயில் நிகழ்ந்துள்ள ஆட்சி மாற்றம் உள்நாட்டில் வேலைவாய்ப்பு ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் மாற்றங்களை ஏற்படுத்தலாம் என்ற எதிர்பார்ப்பு இருக்கிறது.

அதே வேளை 2009ஆம் ஆண்டுக்கு முன்னர் நோர்வே சிறிலங்காவில் நடைபெற்ற நீண்ட கால யுத்தத்தில் இருந்து மக்களை காப்பாற்றுவதற்காகவும், தமிழருக்கு ஒரு தீர்வினை பெற்றுக் கொடுக்க வேண்டும் எனவும் ஆர்வத்துடன் செயற்பட்டது.

ஆனால் அந்த யுத்தம் தமிழ் மக்களின் பேரழிவோடு நிறைவு கண்டது. ஒரு சிறு தீர்வு கூட எமது மக்களுக்கு எட்டப்படவில்லை.

2009இலே நோர்வேயின் ஆட்சி பீடத்திலே அமர்ந்திருந்த அதே தொழிலாளர் கட்சியே தற்போது மீண்டும் ஆட்சிபீடம் ஏறியுள்ளது.

எதிர்காலத்தில் எமது மக்களுக்கான அரசியல் தீர்வுக்காய் மீண்டும் இந்த அரசு குரல் உயர்த்துமா??









வாசகர்கள் தேன் தமிழிதழ் சந்தா செலுத்த.... வங்கிக் கணக்கு.

Bergen tamilsk avis
3626.26.77936
Spare banken vest

வருடம் 12மின் இதழ்கள் 200குரோணர்கள். அச்சுப்பிரதி- 300குரோணர்கள் தபால்செலவு உட்பட (நோர்வே).
மேலதிக விபரங்களுக்கு: யூலியஸ்
தொலைபேசி எண்: (47) 924 63 674




*** 2021 செப்டம்பர் 13 நோர்வேயில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தொழிலாளர் கட்சி சார்பில் போட்டியிட்டு பாராளுமன்ற வேட்பாளராக தெரிவாகியுள்ளார்.**

*** ஐரோப்பிய நாடு ஒன்றின் பாராளுமன்றில் தெரிவாகிய முதலாவது தமிழ் மகள்.**

*** நோர்வே நாடாளுமன்ற உறுப்பினர் kamzy gunaratnam அவர்கள் Radio Tamil Bergen வானொலிக்கு யூலியஸ் அன்ரனி அவர்களுக்கு வழங்கிய நேர்காணலின் சுருக்கம்**

*யாழ்ப்பாணத்தில் பிறந்த கம்சி இரண்டு வயதில் நோர்வே நாட்டுக்குப் புலம் பெயர்ந்தவர். இரு ஆண்டுகள் வடக்கு நோர்வேயிலும் பின்னர் ஒஸ்லோவில் வசித்து வருபவர். அவர் தனது கருத்துக்களை அகம் திறந்து, மிகவும் உற்சாகமாக உரையாடலில் முன்வைத்தார்.*

*அவர் தனது கருத்தில்: "ஒஸ்லோவில் உள்ள பல்லின மக்கள், பல்வகை மதம் சார்ந்த மக்களுடனும் பணிபுரிவதற்கு நான் மிகவும் விரும்புபவள். சிறுவயதில் நான் மாணவர் சங்கத்தில் கூட இருந்ததில்லை. மிகவும் வெட்கப்பட்டு அமைதியாகவே இருப்பவள். அரசியலுக்கு வருவேன் என்று நினைத்ததே இல்லை. பின்னர் மேல் வகுப்புக்கு வரும்போது ஸ்ரீலங்காவில் நடைபெற்ற போர், அதில் எனது பெற்றோர் கொண்டிருந்த அக்கறை என்னை மிகவும் தூண்டியது. அப்போது பாலசிங்கம் யோகராஜா என்பவர் ஒரு மாநகர-சபையில் வேட்பாளராக நின்றார். அவரின் தூண்டுதலாலும் நான் அரசியலுக்குள் நுழைந்தேன்.*
*உலகத்திலேயே நோர்வே நாட்டினை மிகச் சிறந்த நாடாகப் பார்க்கிறேன். உங்களுடைய அபிப்பிராயத்தைக் கூறுவது, அதனை உடைத்து கலந்துரையாடுவது முக்கியம். அதுவே அரசியல் ஆகிறது. மக்களிடமிருந்து வரும் கருத்துக்களே இங்கே அரசியலாக விளங்குகிறது. எங்கள் தாய்நாடான ஸ்ரீலங்காவில் யுத்தம் நடைபெற்ற போது நானும் இங்கே தலைநகர் ஒஸ்லோவில் ஆர்ப்பாட்டங்களில் குதித்திருக்கிறேன். அந்த காலத்தில் எனக்கு அரசியல் தெரியாது. எனக்கு பின்னால் அரசியல்வாதிகள் இருக்கவும் இல்லை. பின்னர்தான் எனக்கு அரசியல் விளங்கியது. நாங்கள் அந்த சக்தியை சரியான திட்டமிடலுடன், சரியான அரசியல் முறைமையோடு நகர்த்தி இருக்க வேண்டும்.*

*பின்னர் நான் தொழிலாளர் கட்சி இளையோர் அமைப்பில் பணிபுரியும்போது இங்குள்ள முக்கிய அரசியல் மற்றும் சமூக ஆர்வலர்களை இணைத்து பல கூட்டங்களை நடத்தி இருக்கிறேன். அதிலே* Erik Solheim *அவர்களும் பங்கேற்றிருக்கிறார்.*
*சிறிலங்காவில் போர் முடிவடைந்து விட்டது. ஆனால் முரண்பாடு இப்பொழுதும் இருக்கிறது. ஒரு நாடு தனது மக்களை சம உரிமையோடு நடத்த வேண்டும். அதற்கு அந்த நாட்டு மக்களும் தமது வாக்குரிமையை பயன்படுத்த வேண்டும். பல மக்கள் அங்கு காணாமல் போயுள்ளார்கள். அவை ஆராயப்பட வேண்டும். இருந்தாலும் தமிழ் மக்களுக்கு தமிழ் மக்களே எதிரிகளாகவும் இருக்கிறோம். நமக்குள் கருத்து சுதந்திரத்தோடு வாதாட முடியாதிருக்கிறது. நமக்கிடையே கருத்து சுதந்திரம் இருக்க வேண்டும். இதற்கு* Radio Tamil Bergen *(தேன் தமிழ் ஓசை) போன்ற வானொலிகள் கேள்விகளை எழுப்பி கருத்துக்களை வெளியிடுவது முக்கிய விடயமாகும்." □*



# யாழ்ப்பாண மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களின் வளமும் பொருளாதாரமும்


ப்ரியமதா பயஸ்

**தொ**ன்று தொட்டுவரும் வாழிடப் பாரம்பரியங்களை என்றும் தன்னோடு சுமந்திருக்கும் வடக்கு மாகாணத்தில், தமக்கென ஒரு சிறப்பான வாழ்வியலையும், தொழில்சார் பாரம்பரியத்தையும் கொண்டு விளங்குபவர்கள் யாழ் மாவட்டத்தின் கரை-யோரப் பிரதேசங்களில் வாழும் மக்கள்.

தொழில் ரீதியான அழகான வாழ்வியல் இவர்களுடைய சிறப்பான நடைமுறை வாழ்க்கை. கடல்வந்து தெளிக்கும் முற்றத்து வீடுகளைக் கொண்ட இந்த மக்களின் தொழில்வளமும், வாழ்வாதாரமும் சீர்தூக்கிப் பார்க்கப்பட வேண்டியது முக்கிய சமூகக் கடமையாகவுள்ளது.

முன்னைய காலங்களைப் போலல்லாது இப்போது கடல்தொழில்சார் பிரச்சினைகள் ஏராளம் தலைதூக்கி உள்ளன. முதலில் தொழில்நுட்பம் சார்ந்த தொழில்முறைகளோ, நவீன தொழில்க் கருவி பாவனைகளோ இல்லாத காலங்களில் இவர்களின் நடைமுறை வாழ்க்கை ஓஹோ என்று போற்றும் அளவுக்கு இருந்தது என்பது என்றும் பசுமையான நினைவுகள்.

ஆனால் தற்போது கரையோரத்து மக்களின் வளச்சுரண்டலுக்கு அவர்கள் மடியிலே கையை வைக்கும் வேற்றுப் பிரதேச வாசிகளின் செயற்பாடுகளும், அவர்களின் வளச்சுரண்டலோடு இணைந்த பொருளாதார சுரண்டலையும் சுட்டி நிற்கிறது. வடக்கு சாராத தென்பிரதேச மீனவர்கள் வடக்கு கரையோரங்களை ஆக்கிரமிப்பதும், குத்தகைக்கு எடுப்பதும் ஒருபுறம் இருக்க, இந்திய மீனவர்களின் வளச்சுரண்டல் காலப்போக்கிலான வளப்பற்றாக் குறையை இவர்களுக்கு தோற்றுவிக்கிறது.






கடல்வளக் கொள்ளைக்காக இந்திய நாசகார இழுவைப் படகுகள் அத்துமீறி வரும் பாதைகள்.

இயற்கை சிறப்பான வளப்பரம்பலையும் விகிதாசார ரீதியிலான வளச் செறிவுகளையும் தன்போக்கில் பகிர்ந்தளித்திருப்பது ஆச்சரியப்பட வைக்கும் ஓர் அறிவியல் உண்மை. ஆனால் இந்த இயற்கையின் விழுமியங்களை மீறிய ஒரு சிலரின் செயற்பாடுகள் கரையோர மக்களின் அடிமடியில் கைவைக்கும் செயலாக உள்ளது.

பருத்தித்துறை, மயிலிட்டி, காங்கேசன்துறை, குருநகர், பாசையூர், காக்கைதீவு, நாவாந்துறை, கொழும்புத்துறை, கிழக்கு அரியாலை, மணியன் தோட்டம், வசந்தபுரம், உதயபுரம், பள்ளிக்குடா, கௌதாரிமுனை, மூன்றாம்பிட்டி, மண்டைதீவு, மண்கும்பான், தாளையடி, மருதங்கேணி, நாச்சிக்குடா, ஊர்காவற்றுறை, மெலிஞ்சிமுனை, பூநகரி, காரைநகர், என சூழ வலம் வரும் கரை ஊர்கள் அபரிதமான வளம் கொழிக்கும் இயற்கை பூமி. இந்த இயற்கைக் கடல்வளத்தைப் பேணிக்காக்கவும் அவர்களின் பொருளாதாரம் சுரண்டப்படாமல் இருக்கவும்இ வழிவகைகள் செய்ய வேண்டியது துறைசார்ந்த அரச மற்றும் சார்பற்ற நிறுவனங்களினதும் மற்றும் இயற்கை வளப்பாதுகாப்பு பிரிவினரதும்

கடமையாகும். வெறுமனே கடலும் கடல்சார்ந்த வளமும் எனக் கூறிவிட்டு போகமுடியாத வடக்கின் கடலுணவுத் தேவையினதும், ஊட்ட உணவினதும் முக்கிய வழங்குநர்களாக இவர்கள் இருப்பது மறுக்கமுடியாத உண்மை.

வடமுனை தீவுகளின் கடல் வளம் அரிதிலும் அரிய சுவை தரும் வளமாக இருப்பது நமக்கு கிடைத்த வரம். ஆனால், மெலிஞ்சிமுனை, ஊர்காவற்றுறை, மண்டைதீவு, புங்குடுதீவு கடற்பகுதி மீனவர்களின் உபகரண முதலீட்டு பற்றாக்குறை நிலைமை யாரும் கணக்கிலெடுக்காத பெரும்துயரநிலைமை. நகரை அண்டிய பகுதி மீனவர்களைப்போல் இவர்களையும் பேணிப் பாதுகாத்துக்கொள்ள வேண்டியது பொறுப்பானவர்கள் கடமை. மிக அரிய கடல் நுணுக்கங்களை இவர்கள் சொல்லக்கேட்பது ஆச்சரியமாக இருக்கிறது. பாரம்பரியத்தோடும் உறவு முறைகளோடும் சேர்ந்த தொழிலாக இவர்கள் இந்த தொழிலை பயபக்தியோடு கடைப்பிடிப்பது மீனவர்களின் பாரம்பரியத்தின் பேணுகையின் உச்சம் என்றே சொல்லவேண்டும்.

எனவே கடலையும், கடற்கரை தூய்மையையும், வளப்பாதுகாப்பையும், தொழில்சார் உபகரண மற்றும் தேவைகளையும் போதியளவான தொழில்முறை பயிற்சிகளையும் வழங்க வேண்டிய தேவை துறைசார்ந்த அமைச்சுக்கு கணிசமான அளவு உண்டு.

## தன்னிறைவுப் பொருளாதாரத்தை கொண்டிருந்த வடக்கு



படங்கள்: தமயந்தி

கடல்துறை கடல்வளப் பொருளாதாரம் என்பது வடக்கைப் பொறுத்தவரை கணிசமான ஏற்றுமதிகள் இல்லாதுவிட்டாலும், குடாநாட்டுக்கு முழுவதும் தேவையான கடலுணவு இவர்களின் வாழ்வாதார பொருளாதாரம் மூலமே ஈடு செய்யப்படுகின்றது. தெற்கினைப் போன்று கிழக்கிலும் ஏனைய இடங்களிலும் இருந்து தருவிக்கப்படாத கடல்வளம் வடக்கில் காணப்படுவது சிறப்பான அம்சமே. வளப் பரம்பலின் சிறந்த திட்டமிட்டபொருளாதார சூழ்நிலைகளை, இந்த மக்களுக்கு வழங்கும் நடவடிக்கைகள், ஒரு பெரும் கட்டியெழுப்பப்பட்ட பொருளாதாரா வலுவை வடக்கில் ஏற்படுத்தும் என்பது பலரும் அறியாத உண்மை.

சிரமமான, தொழில் முறையும், சீரிய வள சேமிப்பும் இந்தப் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும். மூலதனம் அதிகமற்ற தொழிலின் மூலமே நாட்டின் வருமானத்தை அதிகளவு ஈட்டமுடியும் என்பது பொருளாதார வல்லுநர்கள் பார்வை. அந்த வகையில் வடக்கைப் பொறுத்தவரை பயிற்செய்கை மற்றும் கடல்வளம் என இந்த இரண்டும் அசைக்க முடியாத பொருளாதார பலங்கள்.

இவற்றை செவ்வனே பாதுகாத்து வளத்தையும் பொருளாதாரத்தையும் கட்டி யெழுப்ப வேண்டும். குறிப்பிட்ட கடல்சார் வளங்களைப் பதப்படுத்தும் தொழிற்சாலை ஒன்றை உருவாக்குவது, வேலைவாய்ப்பை வழங்குவது, வளங்களைத் திட்டமிட்டு பயன்படுத்தவும், பொருளாதார ரீதியில் இந்த மக்களின் பங்கினை எடுத்தியம்பவும் தயாராகவேண்டும்.

வளம்சார்ந்த தொழில்முறைப் பயிற்சிகள் எப்போதும் எந்த பாரம்பரிய தொழிலுக்கும் இன்றியமையாதது. அதனைவிட வளச்சேதம் இல்லாத தொழில்சார் முறைகள் கண்டிப்பாக பின்பற்றப்பட வேண்டும் என்பது கடல்வளத் தொழிலில் இன்னமும் கரிசனையோடு கடைப்பிடிக்க வேண்டியது முக்கியமானது.

அதாவது வளம் மிகைப்படாத வலுச்சேர்க்கும் வருமானம் என்பது போதிய அறிவுசார்ந்த தொழில்நுட்ப பாரம்பரிய தொழில்முறைகளில் தங்கியிருப்பது.


மற்றும் பாரம்பரிய கூட்டிணைவான தொழில் நடைமுறைகள் வளப்பாதுகாப்பையும் தொழில் வலுவூட்டலையும் தரும் என்பதை நிரந்தரப்படுத்த வேண்டும்.

வளம்சார்ந்த தூரநோக்கினை சகலரும் அறியும் வகையிலான விழிப்புணர்வினை ஏற்படுத்த வேண்டும். பாரம்பரியம் தாண்டிய தொழில் முறைகள் பின்பற்றப்படாமல் போவதால் கடல்வளத்தின் மிதமான பற்றாக்குறைகளும் தேய்வும் ஏற்படுவது துரதிஷ்டவசமானது. இந்த துரதிஷ்டங்களை போக்க பொருளாதாரம் மற்றும் வளத் தேக்கம் என்பவை கண்காணிக்கப்பட்டு, பகிரப்படவும் மேம்படவும் வழிவகுக்க வேண்டும். நீண்டகால பரம்பரையான தொழில்முறைகளை கையாள ஊக்குவிப்பதோடு அதன் நுட்பமுறைகளும் சூட்சுமங்களும் தெளிவுபடுத்தப்பட்ட தொழில் விருத்தியை ஊக்குவிக்க வேண்டும்.

*கூட்டுத் தொழில் முறையான இந்த கடற்தொழில் முறையில் நீர் தொடர்பான விபத்துக்களும், அதிலிருந்து பாதுகாக்கும் வழிமுறைகளும் பயிற்சியாக வழங்கப்பட்டு, கடல்வளத் தொழிலின் தேவைபற்றியும், வளத்தின் பொருளாதார மதிப்பு பற்றியும் புரிந்துணர வைக்க வேண்டும்.*

ஒட்டுமொத்தமாக வடக்கின் பொருளாதார மற்றும் உணவுத் தேவையை ஈடுசெய்யும் கரையோர மக்களின் வாழ்வியலையும் வளநிறைவையும் பேணிடவும் நிலை நிறுத்தவும் திட்டங்கள் பல கொள்ள வேண்டியது வடக்கு அபிவிருத்தி அமைச்சயே சாரும்.□

# MITT LIV MED ANTONY RAJENDRAM





Av Sigrun Rajendram

Foto: Borge Otterlei

Kjært barn har mange navn, sies det. Min mann var ikke noe unntak. På fødselsattesten står det Antony Winceslaus Emilius Rajendram, men i familien, på skolen og i venneflokken fikk han kallenavn, i god tamilsk tradisjon: Kutty, Thamby, Kutty Mooper, Matchan, Tony ... Her i landet skulle han bli alle tamilers Kutty Uncle, «onkelen» alle søkte råd hos, som forsto utfordringene med å være tamil i Norge og som rett og slett skjønte seg på mennesker.

De siste årene har interessen for Kutty Uncle og hans liv økt. Jeg tror det skyldes at nye generasjoner norsk-tamiler prøver å definere hvem de er. Hva er deres spesifikke historie? Det bor jo tamiler på alle kontinenter, så hvordan har det seg at akkurat de bor i Norge? Mange har hørt fra foreldrene og besteforeldre at det var Kutty Uncle som satte Norge på kartet, men hvordan skjedde det, og hvem var han egentlig?

Historien begynner den 6te juni 1955 når to eventyrlystne kamerater setter seg på en *Indian* motorsykkel i Jaffna. Den ene er Antony, sønn av entreprenør og kirkebygger Emilius Rajendram. Han og kameraten, Edwin, drømmer om å studere i utlandet, og for en ceyloneser (Sri Lanka het Ceylon fram til 1972) betyr det den tidligere kolonimakten Storbritannia. Planen er å kjøre over land, og England er målet. Edwin vil bli ingeniør. Antony er en sosialt engasjert ung mann som har sett på nært hold de elendige forholdene som Jaffnas fiskere lever under. Han vet at slik er det ikke i Vesten. Han vil studere hvordan ting foregår der, og da må han reise dit kunnskapen er å finne. Så vil han dra hjem og bruke kunnskapen for å bedre kårene for fiskerbefolkningen.

Reisen nordover ble ikke helt som de to uerfarne karene hadde tenkt. Motorsykkelen var gammel, og på vei inn i Afganistan havarerte den. Fra da av ble det billigste reisemåte gjennom Midtøsten, på taket på langdistansebusser, i overfylte jernbanekupeer og på lasteplanet til en og annen vennlig sjåfør som ga dem haik. Planen var å komme seg til Libanon og finne et lasteskip som tok med passasjerer til England. Men framme i Beirut var reisekassen tom. Arbeid var ikke å få, så de måtte krype til korset og telegrafere hjem etter penger. Det ville ta sin tid, så da noen fortalte om de gale utlendingene som jobbet for kost og losji noen mil unna dro de dit, i håp om at problemet med mat og husly ville bli løst.

Det viste seg å være en leir i regi av solidaritetsorganisasjonen *Service Civil International* (SCI). Deltakerne kom fra flere ulike land som holdt på med å gjenreise en landsby der det hadde gått et stort ras. Kameratene ble ønsket velkommen og fikk bli med i gjengen. SCIs grunnleggende idé er at når folk fra ulike land jobber side om side for å gi hjelp der hjelpen trengs, da skapes den tilliten og forståelsen som er en forutsetning for fred nasjonene imellom. Straks pengene hjemmefra kom dro Edwin videre, men Antony var «bitt av basillen» og ble leieren ut. Miljøet og det disse menneskene sto for snakket direkte til en idealistisk ung mann som han, ukene der ble epokegjørende. Han beholdt kontakten med vennene fra Libanon, og SCI ble selve hjørnesteinen i tilværelsen da han omsider kom seg til London.

Hadde det ikke vært for at Antony nærmest snublet over den dugnad leiren i Libanon hadde det nok aldri blitt et par av Antony og meg, en jente fra den norske småbyen Stavanger. Høsten 1956 kom han til Norge for å studere, etter råd fra norske venner i London. Selvsagt tok han kontakt med I*nternasjonal Dugnad*, som SCI heter i Norge, og ble raskt en del av miljøet der. Lederen på den tiden var min mors søster i Oslo. Hun fortalte om en mann fra Ceylon som dro på dugnadleir i fritiden og som vakte oppsikt der han kom, vakker og eksotisk som han var.

Det skulle gå seks år før vi traff hverandre. Sommeren 1962 kom han til Stavanger for studere fiskeforedling på Hermetikkfagskolen og som hospitant på Bjelland Fabrikker. Tante Ingebjørg hadde sagt at han burde kontakte søsteren hennes, og en søndag ettermiddag sto jeg i solen utenfor hageporten og ventet spent på å treffe mannen jeg hadde hørt så mye om. Sommeren etter dro vi til Nord-Norge på dugnadleir og ble kjærester. Året etter det giftet vi oss og fikk vårt første barn, Rannveig.

Antony hadde beholdt drømmen om å kunne gjøre en forskjell for Jaffnas fiskere. Han hadde hospitert på fiskebåter og forskningsfartøy, studert fiskeriteknologi og lært seg båtbygging. To turer hjem (den ene på moped!) hadde vist at verken myndighetene eller de NGOene som hadde programmer på Ceylon ville satse på fiskeriutvikling i Nord. Skulle drømmen realiseres måtte ha selv ta regien, og ideen om et fiskeriprosjekt begynte å ta form, et prosjekt basert på vestlig kompetanse og lokale forhold, inspirert av det Norge forsøkte å få til i Kerala på den tiden. Han skulle rekruttere ungdommer fra Jaffna til å bli med og finne norske partnere som tente på idéen.

Det lå altså i kortene at vår lille familie skulle flytte til Ceylon før eller senere. Det var et land jeg visste lite om, og på biblioteket i Stavanger prøvde jeg forgjeves å finne lesestoff. Ikke at jeg hadde så mye tid til å spekulere over hva som var i vente, for nå fulgte tre travle planleggings år. Prosjektideen skulle konkretiseres, og i perioder spiste og sov vi mellom papirbunker og tegneutstyr, kalkulator og skrivemaskin. Og midt opp i det hele ble jeg gravid med barn nummer to.

Det vil føre for langt her å fortelle hele historien fram til etableringen av *Malu Meen Enterprise,* og alt som skjedde siden. Kortversjonen er at prosjektet fikk en norsk sponsor, og at NORAD innvilget prosjektstøtte. Dermed gikk finansieringen i orden, og i juli 1967 tok Antony det første spadetaket til det som skulle bli båtbyggeriet i landsbyen Thoppukadu på øya Karainagar utenfor Jaffna. Navnevalget fortjener forresten en kommentar, for det sier mye både om ideologien bak prosjektet, og om hvem Antony var. De to ordene *malu* og *meen* som betyr fisk på henholdsvis singalesisk og tamil skulle signalisere at utvikling i Nord også skulle komme fiskerne sørpå til gode. *Malu Meen Enterprise* skulle være for alle, et verktøy for gjensidig respekt og forståelse i et land der skruppelløse politikere stadig spilte på påståtte motsetninger majoritets- og minoritetsbefolkningen imellom.

Da jeg dro etter var det med en treåring i den ene hånden og tre måneder gamle Siv i en kurv i den andre. Ingen kunne ha forberedt meg på varmen som slo imot meg da flydøren åpnet seg, eller på en hverdag med rasjonering og tomme butikkhyller. Jeg vennet meg til å vaske klær ved brønnen og lærte å lage mat på en parafinovn med det som var å få på markedet i sesongen. Jeg sydde klær til ungene og meg selv på en Singer tråmaskin i lyset fra en parafinlampe, for strøm hadde vi bare når vi fikk tak i diesel til aggregatet. Læringskurven var bratt, og selvsagt var det dager da jeg lengtet tilbake til et velordnet og komfortabelt liv i Stavanger. Men jeg var ung og sterk, - og sta. Dette skulle jeg klare! Det hjalp å ha en klok svigermor og raus og kjærlig svigerfamilie, og at Antonys gamle venner var der for oss.

Etter hvert falt hverdagen på plass. På Karainagar vokste entusiasmen hos ansatte og landsbyfolk etter hvert som prosjektet tok form. Allmannamøter og shramadana (den lokale formen for dugnad) ble språk- og kulturskole for meg, og jeg lærte å bli glad i det karrige og flate landskapet, det spesielle lyset når solen gikk ned over lagunen og den vide stjernehimmelen nattestid.

En vakker dag sto båthallen ferdig. Så ble den første tråleren sjøsatt, med stor festivitas. Men samarbeidet med Norge var begynt å knake i sammenføyningene. Der ville de trekke inn kapitalinteresser i Colombo og ta prosjektet i en kommersiell retning, og siden de satt på pengene var det lite Antony kunne gjøre. Grasrotprosjekt hans ble omorganisert, fikk navnet *Cey-Nor Development Project,* og et styre ble utnevnt som var mer interessert i bunnlinjen enn i fiskernes ve og vel.


*f.v: Kontoristen Sam med datteren, Sams kone med Siv, Rannveig og meg selv, båtbygger Kjell Moi og Antony.*

*Karainagar* prosjekt, *Cey-Nor første Båtdåp*



Det var en utvikling han ikke kunne stå inne for, og når det også ble stilt spørsmål ved hans integritet og faglige troverdighet sa han sa opp.

Igjen var det familie og venner som trådte til og som hjalp oss gjennom den vanskelige tiden som fulgte. Vi ble i landet et par år til, fant nye oppgaver og fikk et nytt barn. Rune ble født i Kilinochchi mens vi hjalp Antonys barndomsvenn med å etablere den første private legepraksisen på de kanter. Men til sist ble det til at vi reiste til Norge, og et nytt kapittel begynte. Vi bosatte oss i Bergen der Antony ble vaktmester og siden sosiallærer på St. Paul katolske skole, og jeg begynte å studere. Før jeg visste ordet av det var vi engasjert i det meste av det som forgikk i det lille internasjonale miljøet Bergen hadde å by på 70-tallet. solidaritetskonserter for Vietnam og Chile, *Ulandsgruppen* som ville skape utvikling i en «glemt» landsby på Jaffna-halvøya og *Innvandrerforeningen* en felles arena for et titalls pakistanere, noen grekere, et par israelere og afrikanere, én singaleser og sist, men ikke minst noen tamiler.

Av de Jaffna-karene Antony hadde rekruttert til fiskeriprosjektet forlot de fleste Cey-Nor da han sluttet. De dro til Norge og ble grunnstammen i det som i årenes løp er blitt et livskraftig diaspora på flere tusen norsk-tamiler. Antony kastet en sten i vannet da han kom til Norge, og fra den stenen spredde ringene seg, i stadig videre sirkler. Ungdommer kom for å få seg utdanning og arbeid, ektefeller kom på på familiegjenforening, barn ble født... og så, tragisk nok, kom flyktningene.

Skiftende tider kom med skiftende utfordringer. Igjen må jeg fatte meg i korthet, for det vil føre for langt å gå i detalj når det gjelder alt som opptok oss. Den voksende gruppen tamiler trengte et felles talerør, og Antony bidro til å starte *Tamilforeningen*, den første i sitt slag i landet. Tamilske barn trengte en arena for å komme sammen og bli trygge på seg selv og sin kulturelle arv, og *Tamilsk Barneskole* ble opprettet. Unge innvandrere trengte et sted å være, og idéen til *Bokkaféen* ble født. Der jobbet han selv i flere år sammen med frivillige fra Bergens ulike innvandrergrupper. Et stadig økende antall flyktninger skapte et behov for å fokusere på asylsøkernes rettssikkerhet, og vi engasjerte oss i NOAS og startet et lokallag i Bergen. Det var en spennende tid med stort internasjonalt engasjement og en gryende bevissthet omkring etisk produksjon og solidarisk handel. Jeg startet RASI, en butikk med varer fra India, fra verksteder jeg selv besøkte og gjorde avtaler med. Det ble 10 år med lange arbeidsdager og mange, lange reiser.

Denne oppramsingen kan gi inntrykk av at vi levde et heseblesende liv. Med en mann som Antony, sosial, idérik og med store krav til sin egen innsats, var det ikke lett å sette på bremsene. Selvsagt hadde vi det travelt, og selvsagt var det dilemmaer. Tok vi på oss for mye? Gikk engasjementet på bekostning av barna? Gikk det ut over helsen?

I 1990 tok det en brå slutt; Antony fikk hjerneslag og døde, 58 år gammel. Visst var det for tidlig, men han slapp det han fryktet mest, å bli pleiepasient. Han slapp fortvilelsen over borgerkrigen i hjemlandet, og sorgen over at fremmedfiendtligheten i Norge økte i takt med ankomsten av flyktninger. Da han var borte måtte jeg omprioritere; det var for eksempel umulig for meg å holde vedlike den samme enorme tamilske omgangskretsen som da vi var to. Samtidig kjente jeg hvor dype spor livet med Antony hadde satt, og hvor viktig det var å holde på de som sto meg nærmest.

En gang for lenge siden flyttet jeg først fra Norge til Ceylon, og så tilbake til Norge, - fra Sri Lanka. Livet jeg levde der ga meg to hjemland, ett her og ett der. Jeg kjøpte hus i Jaffna noen år etter at han døde, og når jeg setter nøkkelen i døren på Raja Illam, da er jeg hjemme. Etter noen måneder drar jeg hjem til Norge, og her gleder jeg meg over alle som fortsatt kaller meg Aunty.

65 år er gått siden etter at han satte fot i Norge første gang er Antony - tamilenes Kutty Uncle - i ferd med å bli en legende. Det er rørende, og det er naturlig. Mitt håp er at det er historien om pioneren, humanisten og idealisten som får leve videre, og at den kan inspirere nye generasjoner norsk-tamiler til innsats for fellesskapet, hvor i verden de måtte ende opp. ■

# உயிரோடு உறவாடு

**வாசகர் உடல் - உளம் சம்பந்தமான கேள்விகளும் மருத்துவரின் பதில்களும்**



**Dr. விமலநாதன் MD PhD**
**(Senior Consultant Cardiologist, Oslo, Norway)**

*எனக்கு ஒவ்வொரு வருடமும் கோடை கால விடுமுறை முடிந்து குளிர் தொடங்கும் போது influense வருகிறது. இதனால் மிகவும் கஷ்டபடுகிறேன். இருமும் போது தொண்டை, வயிறு, நெஞ்சு மிக மோசமாக வலிக்கிறது. பல வருடங்களாக இதனால் அவதிப்படுகிறேன். இதற்கான காரணம் என்ன?*

காலநிலை மாறுகின்ற போது குளிர்தேசங்களில் Influense வருவது வழமை இதன் காரணமாகவே முதியோர்கள் மற்றும் நோய் எதிர்ப்புச் சக்தி குறைந்தவர்கள் தடுப்பூசி போட்டுக் கொள்ளுமாறு அறிவுறுத்தப் படுகிறார்கள். நீங்கள் இந்த வரையறைக்குள் உள்ளடங்காவிட்டால் உங்கள் குடும்ப வைத்தியருடன் தடுப்பூசி போட்டுக் கொள்வது தொடர்பாக ஆலோசிப்பது நலம். வைரசு தொற்று ஏற்படும்போது நீங்கள் குறிப்பிட்டுள்ள உபாதைகள் வருவது வழமை. எனவே இவ்வாறான உபாதைகளை தவிர்த்துக் கொள்ள தடுப்பூசி போட்டுக்கொள்வது சிறந்ததெனக் கருதப்படுகின்றது.

*இவ்வாறான வியாதி எனக்கு இருதய வியாதியினை ஏற்படுத்துமா?*

இருதய வியாதி என்பது பொதுப்படையான சொல். காரணம் இருதயவியாதிகள் பலநூறு வகையானவை. நீங்கள் இதில் எதைப்பற்றி வினவுகின்றீர்கள் எனப் புரியவில்லை. ஆனாலும் மாரடைப்பிற்கும் இதற்கும் நேரடித் தொடர்பிருப்பதற்கான எந்த ஆதாரமுமில்லை.

*சர்க்கரை வியாதிக்கான அறிகுறிகள் எவை?*

உடல் பருமன் குறைந்து மெலிவது, அடிக்கடி சிறுநீர் கழித்தல், இரவில் சிறுநீர் கழிக்க எழும்புவது, அதிக தாகம், சாப்பிட்ட பின்பு அதீத சோர்வும் சோம்பலும் என்பன ஆரம்ப அறிகுறிகளாகும்.

*சர்க்கரை வியாதி வராது பாதுகாக்க என்ன செய்ய வேண்டும்?*

• சாப்பாட்டில் மாப்பொருள் மற்றும் வெல்லத்தின் அளவைக் குறைத்தல்

• ஒழுங்கான உடற்பயிற்சி செய்தல்

• நேரந் தவறாமல் சாப்பிடுதல்

• சாப்பாடு பல்வேறு சத்துக்களையும் உள்ளடக்கிய நிறையுணவாக இருத்தல்

• குடும்ப அங்கத்தவர்களுக்கு சக்கரை வியாதி இருப்பின், வருடத்தில் 2-3 தடவைகள் இரத்தப் பரிசோதனை செய்தல்

• சிற்றுண்டி உணவுப் பழக்கத்தைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருத்தல்




கடந்த 40ஆண்டுகளில் மிக அருகிப்போன ஈழத்து இலக்கிய வாதிகளில் ஒருவராக இருந்தமையினாலே நந்தினி சேவியரின் இழப்பு ஈழத்தின் கலை இலக்கிய உலகிற்கும் பேரிழப்பாகியுள்ளது. 70களில் முகிழ்க்கத் தொடங்கிய படைப்பாளிகளில் மிகவும் முக்கியமான முற்போக்கு இலக்கிய அணியின் எஞ்சியிருக்கும் ஆளுமைகளில் ஒருவராக கடந்த தசாப்தங்களில் மறைத்தும், மறுத்தும் உருவாகிய, உருவாக்கப்பட்ட அரசியல், இலக்கிய இடைவெளியை கடப்பதற்குரிய இணைப்பாக இயங்கியவர். அவரது மறைவுடன் யுத்தகாலத்தில் உருவான 40 வருட இடைவெளி கடக்கமுடியாது மாறிக் கொண்டிருக்கிறது.

சாதியக் கொடுமைகள் தந்த வடுக்களையும் புறக்கணிப்புகளையும் தன் வாழ்நாளெல்லாம் எதிர்கொண்டவர். அதனாலேயே அவரது அரசியலும் படைப்பும் பிரிக்க முடியாதபடிக்கு ஒடுக்குமுறைக்கு எதிரானதாக இருந்தது. இளமைக் காலத்திலிருந்தே அனைத்துவிதமான ஒடுக்குமுறைக்கும் எதிராக மார்க்சியப்போராளியாக தன்னை மாற்றிகொண்ட அவர் இறுதிவரை தன்னை ஒரு மாக்கியவாதியாகவே அடையாளப்படுத்த விரும்பியவர். அவர் மார்க்சிய கட்சிகளின் விசுவாசியாக அல்லாமல் அவர் மார்க்சியவாதியாக இருந்தார். அவரது வாழ்வு ஏழ்மையிலும் எளிமையிலும் கழிந்தது. ஏழ்மை ஒருபோதும் அவரை நிலைகுலையச் செய்யவில்லை.

தனது அரசியல் மற்றும் அறத்தின் மீதிருந்த உறுதியால் உருவான அவரது திமிரை குலைக்கவுமில்லை. எந்த ஒரு தகப்பனும் அனுபவிக்க கூடாத ஒரு பெரும் துயரினைக் கொண்ட கடும் சூழலை எதிர்கொண்டிருந்த போதிலும் சமூகத்தின் அனுமானங்களும் விமர்சனங்களும் அவரது தெளிவை கலைக்கவில்லை. தன் வறுமையிலும் போராட்டங்களிலும் எத்துணை நிமிர்வோடும் திமிரோடும் இருந்தாரோ, அதே ஓர்மத்தை அவர் தக்கவைத்துக்கொண்டவர்.

தன்னுடைய படைப்பைத் தவிர பிறருடைய படைப்பைப் பற்றி அறிந்து கொள்ளவே விரும்பாத இலக்கிய உலகில் இடையறாத மிகச்சிறந்த தீவிரமான வாசகராக, விருப்பு வெறுப்பற்று எல்லாப் படைப்புகளையும் வாசித்தவர் அவர். அவை தொடர்பில் தனது விமர்சனங்களையும் கருத்துக்களையும் தயக்கமும் சமரசமுமின்றி பகிர்ந்து கொள்பவராக இருந்தார். ஒரு படைப்பாளி சமரசமற்ற தீவிரமான வாசகராக இருத்தல் கட்டாயமானது என்பதை அவர் எப்போதும் வலியுறுத்துவார். குறிப்பாக இளந்தலைமுறையினரிடம் ஈழத்து இலக்கியத்தினதும் இலக்கியவாதிகளினதும் அரசியலையும் இலக்கியத்தையும் சேர்த்தே பகிர்ந்து கொள்பராக அவர் இருந்தார்.



இதனால் ஈழத்தின் இலக்கியத்தின் யுத்தகால இடைவெளியைக் கடப்பதற்கான இணைப்பாக அவரால் செயற்பட முடிந்தது. இதன் காரணமாகவே 90களின் நடுப்பகுதியிலிருந்து அவர் பணியாற்றிய வட-கிழக்கு மாகாணசபையின் பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் அவரது வீடும் கலைஇலக்கிய ஆர்வங் கொண்ட இளையோருக்கு இலகுவான, பிடித்தமான இடமாக இருந்தது. திருகோணமலையில் மட்டுமல்லாமல் ஈழத்தமிழ் உலகில் செழிப்பும் வளமும் கொண்ட இளந்தலைமுறையினர் உருவாகவேண்டும் என்பதில் அவர் தீராத அக்கறை கொண்டவராக இருந்தார். அண்மைக்காலமாக முகநூல் அவரது இச்செயற்பாட்டுக்கு மிகவும் உதவியது.

தே.சேவியர் என்ற இயற் பெயரைக் கொண்ட நந்தினி சேவியர் 25.05.1949ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் தென்மராட்சியிலுள்ள மட்டுவில்லில் தேவசகாயம், றோசம்மா தம்பதியினருக்கு மூன்றாவது மகனாகப் பிறந்தவர். ஆரம்பக்கல்வியை மட்டுவில் கல்வயல் சைவப்பிரகாச

வித்தியாசாலையிலும், இடைநிலைக்கல்வியை மட்டுவில் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி, வதிரி திருஇருதயக் கல்லூரி ஆகியவற்றிலும் கற்ற நந்தினி சேவியர் யாழ் தொழில்நுட்பக் கல்லூரியில் தொழிற்கல்வியைப் பயின்றவர்.

1967ஆம் ஆண்டு சுதந்திரன் பத்திரிகையில் "பாரம்" என்ற சிறுகதையின் வாயிலாக இலக்கிய உலகிற்கு நுழைந்த இவரது படைப்புக்கள் தாயகம், மல்லிகை, வாகை, அலை, புதுசு, இதயம், ஒளி, சிந்தாமணி, வீரகேசரி, தொழிலாளி, சுதந்திரன், ஈழமுரசு, ஈழநாடு ஆகிய சஞ்சிகைகளிலும் பத்திரிகைகளிலும் வெளிவந்துள்ளன. நாவல், கவிதை, கட்டுரை, பத்தி எழுத்துக்கள், சினிமா, நாடக விமர்சனம் எனப் பன்முகத் தளங்களில் இயங்கியவர். நந்தினி சேவியர் என்ற பெயருடன் வ.தேவசகாயம், தாவீது கிறிஸ்ரோ ஆகிய புனைபெயரிலும் படைப்புகளை எழுதினார். இடதுசாரிப் போராட்டங்களின் ஊடாகவும், தீண்டாமை ஒழிப்பு வெகுஜனப் போராட்டங்களின் ஊடாகவும், தலித் மக்களின் ஆழ்மனங்களுக்குள் வீறு கொண்ட மன எழுச்சியை, அவர்களின் துன்பியல் வாழ்வை, புறவயமாக, அதற்கேயுரிய கால நீட்சியுடன் கண்டடையும் முயற்சியாக நந்தினி சேவியரின் படைப்புலகம் அமைந்திருந்ததை விமர்சகர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

"அயற்கிராமத்தைச் சேர்ந்தவர்கள்" சிறுகதைத் தொகுப்பு தேசிய கலை இலக்கியப் பேரவை வெளியீடாகவும், "நெல்லிமரப் பள்ளிக் கூடம்" சிறுகதைத் தொகுப்பும், "பிடித்த சிறுகதைகள்" தொகுப்பும் எஸ்.கொடகே சகோதரர்கள் வெளியீடாகவும் வெளிவந்துள்ளன. இவரது சிறுகதைகள், நேர்காணல்கள், கட்டுரை மற்றும் பத்தி எழுத்துக்கள் ஆகியவற்றை "நந்தினி சேவியர் படைப்புகள்" என்ற பெயரில் விடியல் பதிப்பகம் 2014ஆம் ஆண்டு தொகுப்பாக வெளியிட்டது. பரிசு பெற்ற "மேகங்கள்", "கடற்கரையில் தென்னை மரங்கள் நிற்கின்றன" ஆகிய அவரது நாவல்கள் நூலாக்கம் பெறவில்லை. அதுபோல அவர் தன் மனதினுள் இறுதிப் படுத்திக்கொண்ட விரைவில் எழுதி முடிக்க நினைத்திருந்த "பெருவெட்டித் தெரு" என்ற நாவலும் எழுதப்படாமலே போயிற்று.

1965ஆம் ஆண்டிலிருந்து மாக்சிச லெனினிச அரசியல் தளத்தில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (சீனசார்பு) கட்சியின் வாலிப சங்க இயக்கத்தில் இணைந்து செயற்பட்ட அவர், யாழ்ப்பாணம் வடமராட்சி அல்வாய் வடக்கிலும் ஏனைய கிராமங்களிலும் அந்த நாட்களில் கடுமையான அரசியல் வேலைகளையும் சமூக கலை இலக்கியப் பணிகளை முன்னெடுத்தவர்களில் ஒருவராக இருந்தார்.






பன்றித் தலைச்சி அம்மன் ஆலய நுழைவுப்போராட்டத்திலும் அவர் பங்கெடுத்திருந்தார். இறுதிவரை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (சீனசார்பு) நிலைப்பாட்டிலிருந்து அவர் மாறவே இல்லை. கட்சி அரசியலிலிருந்து விடுபட்டிருநதாலும் சமூக விடுதலைக்கான அவரது பங்களிப்பும் ஆதரவும் எப்போதும் இருந்து கொண்டே இருந்தது. தொண்ணூறுகளின் நடுப்பகுதியிலிருந்து திருகோணமலையின் சமூக செயற்பாடுகள் அனைத்தினதும் வேர்களுக்கு நீர் வழங்கிய ஜீவஊற்றுக்களில் ஒன்றாக நந்தினி சேவியர் இருந்தார். அக்காலகட்டத்தைச் சேர்ந்த திருகோண மலையைத் தெரிந்த யாரும் மறுதலிக்க மாட்டார்கள்.

தயக்கமற்ற உறுதியான விமர்சனமும் மார்க்சிய கொள்கை நிலைப்பாடு மற்றும் சாதிய புறக்கணிப்பு காரணமான எழுதத் தொடங்கி 30 வருடங்களுக்கும் மேலாக இருட்டடிப்புக்கு உள்ளாகப்பட்டோம் என்ற அவரது மன அவசம் அவரது இறுதிக்காலங்களில் ஓரளவு ஆறுதல் அடையும் விதமாக அவரது படைப்பக்கள் தொகுதியாக வெளிவந்ததுடன் அவற்றின் மீது வாசக கவனிப்பும் கிடைக்கப்பெற்றன. அவருக்கு பல விருதுகளும் அங்கீகாரங்களும் கிடைத்தன.
க.பொ.த (சா/த) "தமிழ்மொழியும் இலக்கியமும்" பாடத்திட்டத்தில் அவரது "வேட்டை" சிறுகதையும், அவரது சிறுகதைகள் பற்றிய கட்டுரையும் இடம்பெற்றிருந்தது அவருக்கு ஓரளவு திருப்தியை தந்திருந்தது.

நந்தனி சேவியர் தீவிர வாசகர், படைப்பாளி, சமூக விடுதலைப் போராளியாக நாற்பது வருட இடைவெளியை கடக்கும் இணைப்பாக இருந்தவர் இதனாலேயே அவர் அருகிவருகின்ற இலக்கியவாதிகளில் ஒருவராக ஆகிப்போனவர்.

தோழர் நந்தினி சேவியருக்கு
அவரின் தொடரும் தலைமுறையாக
எங்கள் செவ்வணக்கங்கள்.

**போய்வாருங்கள்**
**எங்கள்**
**இனிய தோழரே!**

-ச.சத்தியதேவன்.



# அயல் கிராமத்தைச் சேர்ந்தவர்கள்



நந்தினி சேவியர்

நாங்கள் வழமைபோல் குந்தியிருக்கும் ஞான வைரவர் கோவில் ஆலமரத்தின் கீழ் குந்தியிருந்தோம். சின்னையரின் தேநீர்க் கடை இன்னமும் திறக்கவில்லை. முன்புறத்துத் தட்டியை இழுத்துச்சாத்திக் கட்டியிருக்கும் கயிற்றின் முடிச்சு வழமைபோல் இறுகியே இருந்தது. மனிதர் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு தட்டியை அவிழ்க்க ஆறு மணியாகி விடும். அது எங்களுக்குத் தெரிந்துதானிருந்தது.

காலை நேர வயிற்றுப் புகைச்சலைத் தவிர்க்க சின்னையர் போட்டுத் தரும் தேநீருக்காக நாங்கள் காத்து கிடந்தோம். எங்களது அணியச் சாமான்கள் ஒதுக்குப் புறமாக விழுதுகளில் சாய்த்து வைக்கப்பட்டிருந்தன. முதல் நாள் ஆறுமுகத்தானின் வாய்ச்சி ஆணியொன்றில் பட்டுவிட்டதால் எங்களது அணியத்தில் ஒரேயொரு பொருள் மட்டும் குறைந்திருந்தது.

“கம்மாலைக்குப் போய் அதைத் தோய்வித்துவிட வேண்டும்” என்று ஆறுமுகம் அடிக்கடி முனகிக் கொண்டிருந்தான். வலது கை ஊனமாகிவிட்டது போன்ற மன வருத்தம் அவனுக்கு.

ஆப்புக்களைப் போட்டுக் கட்டியிருக்கும் சாக்குப் பையையும் “வல்லுட்டுக் குத்தி”யையும் எடுக்கப் போன செல்லையன் இழுகயிற்றை எடுத்து வரும் கந்தனோடு தொலைவில் வருவது தெரிந்தது. வாய்க் கசப்பைத் தீர்க்க வெற்றிலையைக் கூடப் போட முடியாமல் சின்னையர் கடைத்தட்டியைத் திறப்பதை எதிர்பார்த்துக் காத்துக் கிடந்தோம். அந்த அதிகாலை வேளையில் எம்மைப்போல் எத்தனையோ மனிதப் பிரகிருதிகள் இப்படித் தொழிலுக்குப் புறப்பட்டுப் போவதையும், காத்துக் கிடப்பதையும் நாங்கள் மனப்பூர்வமாக அறிவோம்.

வாழ்க்கைச் செலவினங்கள் அதிகரித்துக் கொண்டுபோகும் இந்த நாட்களில் எம்போன்றோரின் அவல நிலைகளை நாம் எமக்குள் எண்ணிப் பார்த்து புழுங்குவோம். எமது கைகளின் வலுவானது சற்றுத் தொய்யுமாக இருந்தால் நாம் மழை இல்லாத பயிர்களாகி விடுவோம் என்பது எமக்குத் தெரியாமலில்லை. இவற்றைப் பற்றிச் சிந்திக்கும்தோறும் நாம் உணர்ச்சிவசப்பட்டு விடுவோம். எங்களது மனைவி மக்கள் எங்களோடு சேர்ந்து பாடுபட்ட போதிலும் எம்மால் அன்றாடச் செலவுகளைக் கூடச் சரிக்கட்ட சங்கடங்கள் ஏற்படுவதைப் பற்றித் தீவிரமாக சம்பாஷிப்போம். படிப்பறிவற்ற எம்மைப் போன்றோருக்கு இவை யாவும் புதிர்களாக இருந்த காலமொன்றிருந்தது. நமது பிள்ளைகளை நாம் ஓரளவிற்குப் படிக்க வைத்தோம். அவர்கள் ஓரளவிற்காவது நமக்குச் சகலவற்றையும் விளக்கக் கூடிய வல்லமை பெற்றவர்களாக இருந்தார்கள்.

எமது கிராமம் பின்தங்கிய நிலையிலிருந்து விடுபட, எமது வாலிபப் பிள்ளைகள் உற்சாகத்தோடு உழைத்தார்கள். நாமும் அதற்கு உடந்தையாக இருந்தோம். எமது கிராமம் ஒரு மாறுபட்ட-வித்தியாசமான- மறுமலர்ச்சியுடன் புத்துயிர் பெற்று வருவதை நாம் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. இதற்கு எல்லாம் மூலகாரணம் எமது ஒற்றுமையும் விட்டுக் கொடுக்கும் தன்மையும், நமது பிள்ளைகளின் உற்சாகமுமே. எங்கள் கிராமத்தில் அநேகமானவர்கள் கூலித் தொழிலாளிகளாகவே இருந்தோம்.

ஆண்கள், பெண்கள், வாலிபர்கள், முதியோர்கள் என்ற வித்தியாசம் இன்றி நாம் கூலித் தொழில் செய்து சீவியம் போக்காட்ட வேண்டியிருந்தது. நாம் கிணறு வெட்டுதல், மண் சுமத்தல், கல்லுடைத்தல் ஆகிய தொழில்களுடன் பனை அடித்தல், துலா வெட்டுதல் போன்ற தொழில்களிலும் ஓரளவு தேர்ச்சி பெற்று இருந்தமையால் எமக்குள்ளே போட்டிகளும் பொறாமைகளும் இருக்கவில்லை. அப்படியான ஒரு நிலைமை ஒரு காலத்தில் இருந்ததென்னவோ உண்மைதான். அவை மிகுந்த அவமானத்திற்கும் அசூசைக்குமுரிய பழைய மடிந்து விட்ட நிலை-மைகள். செத்துப்போன அந்தக் காலத்தைப் பற்றி நினைக்குந் தோறும், நாம் எமக்குள் மிகுந்த வெட்கமடைவோம். இந்த ஒரு நிலைமையே எங்களை ஐக்கியமாக்க உதவியதெனலாம்.

காலை நேரங்களில் நாம் அந்த ஞான வைரவர் கோவில் ஆலமரத்தின் கீழ் கூடுவோம். கலட்டி பூவற்கரை திடல், முடவானை, குச்சம் முதலிய கிராமத்தின் மனிதர்கள் சந்திக்கும் கேந்திர பூமி அது. அங்கு சின்னையரின் தேநீர்க் கடையில் சூடாக ஏதாவதை வயிற்றினுள் தள்ளியபின் சிதறுதேங்காய்களாக நான்கு திக்கும் பிரிந்து உழைக்கச் செல்வது நமது அன்றாட அத்தியாவசிய கைங்கரியமாக இருந்துவரும் நித்திய கருமம்.

மைமலில் சோர்வுடன் திரும்பிய பிறகு எமது உடல்களைச் சற்று ஆசுவாசப்படுத்தியபின், எமது குடில்களின் ஒதுக்குப்புறமாக எமது மக்களின் முகங்களைப்போல, இறுகி வெடித்துப் பிளந்து போய்க் கிடக்கும் பொட்டல் வெளியில் கூட்டமாகக் கூடி இரவு இறுகும்வரை சம்பாசித்துக் கொண்டிருப்போம்.

எங்களில் குடிவெறிகாரர்களும் இருந்தோம். ஆனாலும் அந்த நிலையில் நாம் எமது குடிசைகளுக்குள் போய் முடங்கிக் கொள்வோம். எமது மனைவிமாருக்கும் எங்களுக்கும் இடையில் வாக்குவாதங்களும் வக்கணைகளும் சில நேரங்களில் மூண்டு விடுவதுமுண்டு. அப்போது எல்லாம் மற்றவர்கள் தலையிட்டுச் சமாளிக்கும் ஒரு நிலையை ஏற்படுத்தாமல் நாமே அடங்கிப்போகும் ஒரு பழக்கத்தை நாம் உண்டாக்கிக் கொண்டோம்.

பிறருக்கு இடையூறாக நாம் இருக்க விரும்புவதுமில்லை. பிறர் எம்மை அதற்கு அனுமதிப்பதுமில்லை. எம்மைப் போல் தம்மை ஆக்கிக் கொள்ளாத உதிரிகள் சிலர் எம்மிடையே இல்லாமல் இல்லை. அவையும் தொங்கு தசையாகிக் கிழடு தட்டிவிட்ட மனிதர்கள்தாம். அவர்களின் எண்ணிக்கை மிக மிகச் சொற்பமாகவே இருந்தது. அந்த மனிதர்களைப் பற்றி நாம் கோபிப்பது இல்லை. காரணம் நிதர்சனத்திலேயே அவர்களை எமக்குப் புரிந்திருந்தது.

காலம் எமக்குச் சரியான திசையைக் காட்டிக் கொண்டிருந்தது. நாம் தெளிவு பெற்றுக் கொண்டிருந்தோம். எம் கண்முன் ஒரு பாதை தெரிந்து கொண்டிருந்தது. அதன் வழியே நாம் நமது சந்ததியை வழி நடத்திச் செல்வதற்கு ஊக்கமாக இருந்தோம். வழமை போலவே சின்னையர் நெடுநேரம் காத்திருக்க வைக்கவில்லை. அவர் தட்டியை அவிழ்த்துக் கடையைத் திறப்பதற்கு நாம் உதவி செய்தோம். தேநீர்க் கடை சுறுசுறுப்பாகத் தொடங்கி விட்டது. அடுப்பின் புகையோடு சுகந்தமான சாம்பிராணிப் புகையும் காற்றில் மிதந்தது.

உற்சாகமாக சின்னையர் போட்டுத் தந்த தேநீரைப் பருகி விட்டு வல்லுவங்களை அவிழ்த்து வெற்றிலையை குதப்பியபடி அணியங்களைத் தோள்களில் ஏற்றிக் கொண்டு நாம் நடக்கத் தொடங்கினோம். பிள்ளையார் கோவிலடித் தோட்ட வெளியில் இறங்கி கோவிலை நோக்கி எம் கால்கள் நடந்தன. முதல் நாள் நாம் துண்டு போட்ட பனையில் இன்று சிலாகைகள் அடிக்க வேண்டியிருந்தது.

எங்களது கால்கள் சற்று வேகமாக நடக்கத் தொடங்கின. மாயக்கைக் குளத்தை அண்மி நாங்கள் நடந்தபோது எட்ட நிற்கும் பனை வடலிகளை ஊடறுத்து அழுகுரல் சத்தம் கேட்டது. நாம் துணுக்குற்றுச் செவிமடுத்தோம். காற்றிலே மெல்லிய ஒப்பாரியில் அனுங்கல் பரவிவந்தது. எமது கால்கள் நிதானித்தன. நாங்கள் கண்களை வடலிகளை நோக்கி எறிந்து நடந்தோம். தூரத்தில் மாயக்கை முருகன் காலெறிந்து நடந்து வருவது எமக்குத் தெரிந்தது.

நாம் அவனருகில் கடுகி நடந்தோம். அவன் கூறிய சம்பவம் எம்மை மிகுந்த அதிர்வுக்குள்ளாக்கியது. நாம் திகைத்து நின்றோம். எங்களது பாலிய நண்பன் கிட்டிணன் பனையால் விழுத்து இறந்து விட்டான் என்ற செய்திதான் அது.

நாம் வடலிகளுக்குள்ளால் விழுந்து கிட்டிணன் வீட்டை நோக்கி ஓடினோம். வெட்டிப் பிளந்து விட்ட மரம் எங்களைக் காத்துக் கிடக்கிறதென்ற நினைப்பே எங்களுக்கு மறந்து போய் விட்டது.

நேற்று மாலை நிகழ்ந்துவிட்ட அந்த சம்பவத்தை நாம் நிச்சயமாக அப்பொழுதுதான் அறிந்தோம். எங்களுக்கு மிகுந்த கவலை ஏற்பட்டிருந்தது. கிட்டிணனை நாம் சிறுவயதிலிருந்தே அறிவோம். அவன் மிகுந்த, உற்சாகமான ஒரு தொழிலாளி. துணிச்சல் நிறைந்தவன். யாருக்கும் பயப்படாதவன், முரடன்.
எங்களுக்கும் அவனுக்கும் இடையில் இருந்த அந்த நட்பு மானசீகமானது. அது மிகுந்த நெருக்கமானதும், பவுத்திரமானதும் கூட.

சகல தொழிலாள, விவசாயிகளைப்போல அவனிடமும் எங்களிடமும் இழப்பதற்கு ஒன்றுமே இருக்கவில்லை. இந்த நிலைமையும் நமது இறுக்கமான பிணைப்புக்கு ஒரு காரணமாக இருக்கலாம். நேற்று முன்தினம்கூட அவன் எங்களைத் தேடிக் கிராமத்திற்கு வந்திருந்தான்.

தனக்கும் ஊரின் சில பெரிய மனிதர்களுக்கும் இடையில் ஏற்பட்ட விரோதங்கள் பற்றியெல்லாம் அப்போது அவன் எங்களிடம் பூடமாகக் கூறினான். தன்னுடைய சமூகத்தவர்களைத் தன்னுடன் நின்று கதைக்கத் தடை விதிக்கப் பட்டிருப்பதாகவும் கூறினான். அந்த மக்கள் மிகுந்த பயமுள்ளவர்களாக இருந்தமையால் கட்டுப்பாட்டுக்குள் அடங்கிக் கிடப்பதாக அவன் மனமுடைந்து மிக விசனப்பட்டான். நாமும் அதைப் பற்றிக் கவலை தெரிவித்தோம். இன்று அவன் இறந்து விட்டான். தங்களின் ஒற்றுமையின்மையைப் பற்றி மனமுடைந்தவன் தனி வழிப் பயணம் புறப்பட்டு விட்டான்.

எமது கால்கள் கிட்டிணனது வீட்டினுள் பிரவேசித்த போது அவன் வீட்டின் முன்பு சிறு பந்தல் போட்டு வெள்ளை கட்டப்பட்டிருந்தது. கிட்டிணனது சடலம் பெரிய கட்டிலொன்றில் வளர்த்தப்பட்டிருந்தது. அவனது தலைமாட்டில் குத்துவிளக்கொன்று அழுது வடிந்து கொண்டிருந்தது. கிட்டிணனின் மனைவி தங்கச்சியம்மாவும், மகள் செல்லக் கண்டுவும் பெரிதாக ஒப்பாரி வைத்து கொண்டிருந்தனர்.

நாங்கள் எங்கள் அணியச் சாமான்களை வைத்துவிட்டு கிட்டிணனை அருகில் சென்று பார்த்தோம். எமது கண்கள் பனித்து நீரைச் சிந்தின. அன்று எங்களுக்கு வேலைக்குப் போகும் எண்ணமே மறந்து விட்டது. அயல் கிராமத்து அந்த மனிதனுக்காக நாம் அங்கே நின்றிருந்தோம்.

முருகன் எல்லாக் கிராமங்களுக்கும் இழவு அறிவித்திருந்தான். எமது கிராமத்திலிருந்தும் பலர் வந்திருந்தார்கள். எங்களது பையன்களும் வந்திருந்தார்கள். சந்தைக்கு போனவர்கள் திரும்பினர். செத்த வீட்டில் செய்ய வேண்டிய அலுவல்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

நாம் முற்றத்து வேலியோரம் பனை நிழல்களில் குந்தியிருந்து சுருட்டுக்களைப் பற்றுவதும், வெற்றிலைகளைச் சப்புவதுமாக, கிட்டிணனைப் பற்றி சம்பாஷித்துக் கொண்டிருந்தோம்.

நேரம்... கடந்து கொண்டிருந்தது....
நாங்கள் அயல் கிராமத்து அந்த மனிதனுக்காக எழுந்திருந்து உதவி செய்ய முனைந்தோம். இரண்டு பூவரசம் கதிகால்களைத் தறித்து, கிட்டிகளைப் பிணைத்து நாம் பாடை வேலைகளைத் தொடங்கி விட்டோம். ஆறுமுகம் பன்னாங்கு பின்னும் காரியத்தில் இறங்கியிருந்தான். மாயக்கையின் மனிதர்களது முகங்கள் இறுகிச் சோர்ந்து கிடப்பதை நாம் அந்த வேளையிலும் அவதானிக்காமல் இல்லை. அதன் அர்த்தம் எங்களுக்குப் புரியவும் இல்லை.

சூரியன் உச்சியைக் கடந்து விட்டான். மூன்று மணிக்கு மேலிருக்கும் போலிருந்தது. வந்த மனிதர்கள் பலர் விடைபெற்று விட்டார்கள். நாமோ காத்து இருந் தோம். அந்த அயல் கிராமத்து மக்கள் மௌனமாக உலாவிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் ஏதோ ஒரு பயத்தினால் பீடிக்கப்பட்டவர்களாய் ஒதுங்கி ஒதுங்கி நடந்து கொண்டு இருந்தார்கள். எமக்குப் பொறுமை எல்லை கடந்து விட்டது. முருகனைக் கைச்சாடைகாட்டிக் கூப்பிட்டான் ஆறுமுகம். "என்ன ஆரேனும் இன்னும் வரவேணுமே..?"
"இல்லை ஆறுமுகம்."
"......"
"பின்னை ஏன் சுணக்கம்..?, வந்த சனமெல்லாம் போகுது. எப்ப எடுக்கப் போறியள்?"
முருகன் விம்முவது எங்களுக்குப் புரிந்தது. ஏதோ விபரீதம் நடக்கப் போவதாக அவன் அழுவதும் எங்களுக்குத் தெரிந்தது. ஆறுமுகம் எங்களருகில் விரைந்து வந்தான். எமது பையன்களும் எமது கிராமத்து மனிதர்களும் வந்தார்கள்.

"கிட்டிணன்ரை சவத்தைக் காவ ஒருதரும் போகக் கூடாது என்று தடை விதிச்சு இருக்காம். காவச் சம்மதிக்கிறாங்களில்லை. பயப்பிடுறாங்கள்."

எமக்கு எல்லாம் புரிந்து விட்டது. சனத்தின் அழுகுரலையும் அதற்குப் பங்கு போடும் மனிதர்களையும் விட்டு நாம் சற்று ஒதுக்குபுறமாக நடந்தோம். முருகனைத் தனியே அழைத்து மற்றவர்களைக் கூட்டி வரும்படி கூறினோம். அவர்கள்- ஆண்கள்- தயங்கியபடி எங்களருகில் வந்தார்கள். ஆறுமுகம் சற்றுச் சூடாக அவர்களைப் பார்த்துப் பேசினான்.

"நீங்கள் பயந்தவர்கள். ரோசமில்லாதவர்கள்."
"எப்பிடியும் அவங்களிட்டைத்தானே நாங்கள் பிழைக்கி றம். எங்களுக்கு உதவியில்லை."
அவர்கள் தலைகுனிந்து பேசினார்கள்.

"நாங்கள் இருக்கறம். பயப்பிடாதையுங்கோ. கிட்டிணனைப் போல இருங்கோ" ஆறுமுகம் பேசினான்.

மாயக்கை வாழ் மனிதர்கள் துணிந்து நிமிர்ந்த அந்த நேரம் நாம் துணிச்சலைக் கொடுத்தவர்கள் என்பதைக் காட்டாமல் ஒதுங்கி நின்றோம். அவர்கள் பரபரப்போடு சவத்தைக் குளிப்பாட்டி வாய்க்கரிசி போட்டு விரைவாகச் செயற்பட்டார்கள். எல்லாம் பரபரப்பாக நடந்து முடிந்தன. முருகன் தேவாரம் பாடினான் "கூற்றாயினவாறு விலக்ககலீர் கொடுமைபல செய்தன."

முன்னே கொள்ளிச் சட்டியுடன் கிட்டிணனின் புத்திரர் நடக்க அவர்களின் பிறகே வேலியைப் பிரித்துக் கிட்டிணனின் சவம் நாலு மாயக்கை மனிதர்களின் தோளில் ஏறிப் புறப்பட்டது. நாம் எமது கோடரிகளையும் வாய்ச்சிகளையும் தோள்களில் ஏற்றியபடி சவத்திற்கு முன்னும் பின்னும் நடந்தோம். நம்மில் சிலர் பின்தங்கி கிட்டிணனது வீட்டில் காவலுக்கு நின்றார்கள். சுடலையைச் சமீபித்தும் கூட நாம் எதிர்பார்த்ததுபோல் எதுவும் நடக்கவில்லை.

சவம் கட்டையில் வளர்த்தப்பட்டு நெஞ்சாங்கட்டை வைக்கப்பட்டது. சவத்தைச் சுற்றி நடந்த கிட்டிணனின் மூத்தபையன், கொள்ளிக்குடம் கொத்தப்பட்டதும் சம்பிரதாயமாகக் கொள்ளியை வைத்தான். அது முடிந்ததும் காவோலைகளை கொளுத்தி நெருப்பைப் பெரிதாக்கினார்கள் மாயக்கை வாழ் மக்கள். நாங்கள் மெதுவாக அங்கிருந்து நகரத் தொடங்கி னோம். எம்மில் சிலர் சுடலையிலும் எரிப்பவர்களுக்கு உதவியாக நின்றிருந்தார்கள்.

அந்த அயல் கிராமத்து மனிதர்களுக்கு அன்றும் சரி அதற்குப்பிறகும் சரி எதுவித தீங்கும் பிறரால் நேரவில்லை. அவர்களும் எங்களைப் போல் தங்களையும் ஆக்கிக் கொள்வதற்கு நாம் உதவியாக இருந்தோம். ஒரு நாள் அவர்கள் எங்களைப்போல வேதங்களை ஆக்கிக்கொள்வார்கள்.

*மல்லிகை-1972*




லாபம் தமிழ்த் திரை வரலாற்றில் மிக முக்கியமானதொரு அரசியல் படைப்பு. அரசியலா அப்படியென்றால் அதில் பார்க்க ஒன்றுமில்லை என்று எண்ணி விட வேண்டாம். நம் வாழ்வை ஒட்டுமொத்தமாக தீர்மானிக்கும் சக்தி எதுவோ அதை பற்றிய பாடம் தான் தோழர் ஜனநாதன் எழுதி இயக்கியுள்ள லாபம் திரைப்படம். நீங்கள் தான் உங்கள் வாழ்வை தீர்மானிக்கிறீர்கள் என்று மதி மயக்கும் சாமியார்கள் பேச்சுகளைக் கேட்டு ஏமாந்து போயிருப்பவர்களுக்கும், வாழ்வில் நேரும் துன்பங்களுக்கு விதிதான் காரணம் என்று சமாதானம் கொள்ளும் மக்களுக்கும் நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய உண்மை எது தெரியுமா என்று தட்டி எழுப்பியுள்ளார்.

5வருடத்திற்கு பின் ஊரை விட்டு சென்ற பக்கிரி (விஜய் சேதுபதி) தன் ஊருக்கு வருகிறார். விவசாயம் பொய்த்து போய், இடம் பெயரப் போகும் மக்களை தடுத்து நிறுத்தி நாம் செழிப்புடன் விவசாயம் செய்து வளமோடு வாழலாம் என்னை நம்பி வாருங்கள் என்று நம்பிக்கை அளித்து தன் இயக்கத்தை தொடங்குகிறார் நாயகன்.

தனித் தனியாக இருந்தால் ஏது பலம், ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்பதை உற்பத்தி முறையில் நடைமுறைப்படுத்த முயல்கிறார். முதல் முறையாக கூட்டுப் பண்ணை விவசாயம் குறித்து பிரச்சாரம் செய்து மக்களை அணி திரட்டுகிறார். விவசாயத்தை வாழ வைக்க இதுவரை பேசப்பட்டுள்ள நாயக கதைகளுக்கும் பொதுவுடைமை சித்தாந்த அடிப்படையில் உற்பத்தி முறை, உழைப்பு மற்றும் பகிர்மானம் குறித்து பேசும் இந்த படத்திற்குமான வேறுபாடு இந்த புள்ளியில் தொடங்குகிறது.

நிலங்களைக் கொள்ளையடித்து வைத்திருக்கும் உள்ளூர் நிலவுடைமையாளர்கள் மற்றும் இயற்கை எரிவாயு தயாரிக்கும் "நவீன" ஆலை உற்பத்தி தொடங்கி உலக கோடீஸ்வரர்களின் பட்டியலில் இடம் பிடிக்க வெறியோடு அலையும் பெரு முதலாளி ஒருவர் என்று எதிர் தரப்பு ஒன்று இயங்குகிறது.

மக்கள் நிலங்களைக் கொடுக்க விடாமல் தடுக்க வில்லன்கள் முயற்சிக்க நாயகன் அதை முறியடிக்க பல உத்திகளை பயன்படுத்துகிறார். கலை (இசை நடனம்) வாயிலாக மக்களிடம் பிரச்சாரம் செய்கிறார். அதன் மூலம் நாயகியும் நாயகனின் பாதையில் இணைகிறார்.


S.P.ஜனநாதன்

நிலவுடைமையாளர்கள் மற்றும் பெரு முதலாளியின் சதிகளுக்கு இடையில் பொதுவுடைமை உற்பத்தி முறையில் நாயகன் வெற்றி பெற்றாரா இல்லையா என்பதே மீதி கதை.

மேலோட்டமாக இது ஏதோ விவசாயம், ஹீரோ, வில்லன், ஹீரோயின், நண்பர்கள், பாட்டு டான்ஸ் என்று தோன்றலாம் ஆனால் உண்மையில் இந்தப் படம் விவசாயப் பிரச்சினையை மட்டும் பேசவில்லை. ஒரு சமூகத்தில் உழைக்கும் மக்களின் பங்கு என்ன, அவர்களின் உரிமைகள் என்ன, அவர்களுக்கு கிடைக்க வேண்டிய பலன் என்ன, அதை அடைந்திட அவர்கள் செய்ய வேண்டியது என்ன என்பது வரை பேசுகிறது லாபம்.

மக்களை ஒன்று திரட்டுவதில் சாதியை வைத்து பிரித்து விடுகிறார்கள் என்னும் அரசியலைப் போகிற போக்கில் ஒரே






வசனத்தில் தீர்வு சொல்கிறார் "சாதியைத் தூக்கி ஓரம் வச்சுட்டு வர்க்க ரீதியா அணுகுவோம்" என்கிறார். சாதியப் பிரச்சினையை கம்யூனிஸ்டுகள் புறக்கணிக்கிறார்கள் என்பதல்ல இதன் பொருள். சாதியும் வர்க்கப் பிரிவினையின் ஓர் அங்கமே. வர்க்கப் போராட்டம் தொடுத்து அரசியல் பொருளாதார அதிகாரத்தைப் பெறும் அந்தப் போராட்டத்தில் சாதியை ஒழிக்கவும் வழி பிறக்கும் என்கிற சூத்திரத்தை முன் வைக்கிறார் ஜனநாதன்.

சாதி, மொழி கடந்து பண்ணையார்களும், முதலாளிகளும் கூட்டு வைத்துக் கொள்வதைப் பார்க்கையில் இதற்கு ஆதாரங்கள் தேவையில்லை. சமூக விஞ்ஞானம் என்று நமக்குப் பள்ளிகளில் போதிக்கப்படுவது வெறும் அறநெறிப் பாடங்களே. அதுவும் அடங்கிப் போவதற்கான நன்னெறிகளாகவும், மத ரீதியான மூளைச் சலவையாகவுமே இருக்கும். ஆனால் லாபம் திரைப்படம் மூலமாக ஜனநாதன் எடுத்தாண்டிருப்பது உலகின் ஆகச் சிறந்த அரசியல் பொருளாதார பாடம்.

மக்களின் துன்பத்திற்கு என்ன காரணம் என்று கார்ல் மார்க்ஸ் எங்கல்ஸும் ஆய்வு செய்து உலகிற்கு அளித்த மார்க்சியம்-மூலதனம் என்னும் உழைக்கும் வர்க்க விடுதலைக்கான அரசியல் பாடத்தைத் திரைப்படமாக எடுத்துள்ளார். இதுவரை தமிழ் சினிமா-வில் யாரும் செய்திடாத முயற்சி இது.

விவசாய நில மீட்பு & பஞ்சமிநில மீட்பு போராட்டம் வழியாக ஆதி மூலதனத் திரட்டல் எப்படி நிகழ்ந்தது என்னும் மார்க்சிய பாடத்தை தொடங்கி, இறுதியில் முதலாளித்துவத்தை சுக்கு நூறாக தகர்ப்பது வரை ஒவ்வொரு சூத்திரத்தையும் தன் கூர்மையான வசனங்கள் மூலம் பொறி பறக்க பிரச்சாரம் செய்கிறார் ஜனநாதன்.

ஆம், இந்தப் படம் பிரச்சாரம் தான். "லெக்சர்"தான். பாடம் தான். அதனால்தான் இது தனித்து நிற்கிறது.
லாபத்திற்காக சினிமாவைப் பயன்படுத்தி எவ்வளவோ குப்பைகள் பிரச்சாரம் செய்யப்படும் போது மக்களை துன்பங்களில் இருந்து விடுதலை செய்யக் கூடிய ஒரு சமூக விஞ்ஞானத்தை பிரச்சாரம் செய்தால் என்ன?

கலைத் தன்மையோட விஷத்தைக் கொட்டிக் கொண்டிருக்கும் ஒரு உலகத்தில் அவசியமான பாடத்தைக் கொடுத்து சென்றிருக்கிறார் தோழர் ஜனநாதன்.

ஒரு பொருள் உற்பத்தியில் மூலப் பொருள் என்பது எப்படி கிடைக்கிறது. எத்தனை "விளை பொருட்கள்" கிடைக்கின்றன, ஆனால் முதலாளிகள் "மூலப் பொருளுக்கு" மட்டுமே விலை பேசி விட்டு எத்தனை தொழில்களை செய்கிறார்கள் என்பதைக் கரும்பாலை உற்பத்தியை மையப்படுத்திச் சொல்கிறார்.

எல்லாவற்றையும் விட முக்கியமான பாடம், உழைப்பின் பாத்திரம் பற்றியது. அவனின்றி அணுவும் அசையாது என்னும் போலியான மதப் பிரச்சாரங்களை முறியடிக்கும் விதமாக உழைப்பின்றி எதுவும் கிடையாது, உழைக்கும் மக்களின்றி முதலாளிக்கு வாழ்வே கிடையாது என்பதை கர்ஜனையோடு முழங்கி இருக்கிறார் எங்கள் தோழர் ஜனநாதன்.

காட்டு உயிர் சங்கிலி போல் மனித உற்பத்தி சங்கிலியானது எவ்வாறு சர்வதேச தன்மை கொண்டது, முதலாளிகளுக்கு செக் வைப்பது எப்படி என்பதை பருத்திக்கு விலை நிர்ணயிக்கும் உத்திப் போராட்டம் மூலம் பாடம் நடத்துகிறார்.

மூலதனத்திற்கு சர்வதேச தன்மையும் வலைப்பின்னலும் உள்ளது எனில் உழைக்கும் வர்க்கத்திற்கும் சர்வதேச தன்மையும் வலைப்பின்னலும் உள்ளது. அதில் தொழிற்சங்கங்களின் பங்கு என்ன என்பதை வெட்ட வெளிச்சமாக காட்டிய போது மெய் சிலிர்த்துப் போனது. இதை புரிய வைக்கத்தானே கம்யூனிஸ்டுகள் போராடுகிறார்கள் என்று கலங்கிய தருணம் அது.

வர்க்கப் பிரிவுகள் பற்றி பேசுவதையும் விட்டு வைக்கவில்லை. பண்ணையார்கள் வில்லனின் சதியை புரிந்து கொண்டு நாயகனோடு இணைய வருகிறார்கள். நிலவுடைமைக்கும் முதலாளித்துவத்திற்கும் முட்டிக் கொள்ளும். அப்போது அவர்கள் உழைக்கும் வர்க்கத்தோடு தான் கை கோர்ப்பார்கள் என்னும் இயக்கவியல் விதி இது.

இப்படி ஒவ்வொரு காட்சியாக விரிவாக எழுதினால் மார்க்சியம்-மூலதனத்திற்கு வாசகர் வழிகாட்டியாக இந்த திரைப்படம் அமைகிறது என்பதை சொல்லி நிறைவு செய்யலாம்.

"அறுவடை செய்யலாமா", "அறுவடை செய்யலாமா" என்று நாயகன் கேட்பதை நாம் வெறும் விவசாய அறுவடையோடு மட்டும் புரிந்துகொள்ளக் கூடாது. "உங்கள் உழைப்பின் பலனை அறுவடை செய்யலாமா" என்பதே அந்த முழக்கம்.

உழுபவனுக்கே நிலம் சொந்தம், உழுபவனுக்கே அதன் விளைச்சலும் சொந்தம். உற்பத்திக்கு தேவையான செலவினங்கள் போக மீதமுள்ள "பொருள்" யாவும் உழைப்பவருக்கே சொந்தம். லாபம் என்பது செயற்கையானது அது அவசியமே இல்லை என்பதை இவ்வளவு ஆணித்தரமாக சொன்ன படம் வேறு எது?

வளர்ச்சி என்றால் என்னவென்ற கேள்வியை எழுப்ப தூண்டும் படமிது? யாரின் வளர்ச்சி, எவரது உழைப்பில் எவரின் வளர்ச்சி? உழைப்பு தான் அனைத்து செல்வங்களையும் உருவாக்குகிறது என்னும் போது ஏன் உழைக்கும் மக்கள் ஏழ்மையில் துன்புற வேண்டும். அதற்கு காரணமாக இருப்பது எது என்பதை உணர்த்தி தன் வாழ்நாள் பயணத்தை முடித்துக் கொண்ட தோழர் ஜனநாதனுக்கு செவ்வணக்கம் செலுத்துவோம்.

லாபம் திரைப்படம் பற்றி வந்த ஒரு விமர்சனத்தில் ஒருவர் எழுதுகிறார், கரும்பிலிருந்து என்னவெல்லாம் கிடைக்கிறது என்பது கூட விவசாயிகளுக்கு தெரியாதா, விஜய்சேதுபதி மட்டுமே இந்த படத்தில் எல்லாம் தெரிந்தவராக வருகிறார். அடுத்தவர்களின் அறிவுக்கு மதிப்பே இல்லாதது போல் உள்ளது. ஆடியன்சை



கூட விட்டு வைக்காமல் ஒரு சிறுமி லாபம் என்றால் என்னவென்று கேட்கிறார். உடனே பக்கிரி பாடம் எடுக்கிறார். பாஸ்வர்ட் வைப்பது பற்றி எண் கணித பாடம் நடத்துகிறார். ஒரே பாடம் பாடம் பாடம் என்பதாக இருக்கிறது அந்த விமர்சனம்.

முதலில் இந்த படத்தில் வருவது ஒரு கதாநாயகன், வில்லன் என்று பார்த்தால் இந்த கோளாறு வரத்தான் செய்யும். விஜய்சேதுபதி ஒரு நடமாடும் நூலகமாக, வரும் ஒரு உருவகம் மட்டுமே. மூலதனத்தை தேடிப் படிப்பதற்கு பதில் ஒரு நூல் (அல்லது நூலை எழுதியவர்) நம்மோடு உரையாடினால் எப்படி இருக்குமோ அதன் திரை வடிவம் தான் அந்தக் காட்சிகள். ஏற்கனவே தெரிந்திருந்தாலும், ஒரு ஆய்வு நூலில் தொடர்புடைய எல்லா தகவல்களையும் வைத்து தான் விளக்குவார்கள். வாசகர் முட்டாள் என்பது அதன் அர்த்தமல்ல. தரவுகளை முழுமையாக முன் வைக்க வேண்டும் என்பதே ஒரு ஆய்வு நூலுக்குரிய பண்பு. அதோடு எல்லாம் தெரிந்தவர் என்று இங்கு யாருமில்லை.

“உங்க கிட்ட அல்லது உற்பத்தியாளர்கிட்ட ஒரு பொருளை வாங்கிட்டு ஒரு ஆலை முதலாளி என்னல்லாம் செய்றான்னு தெரியுமா” என்று எங்கள் பிரதிநிதி சொல்லாமல் வேறு யார் எங்களுக்கு கற்றுக் கொடுப்பார்.

அதையெல்லாம் விட முக்கியமான விசயம், கரும்பாலையைச் சுற்றிக் காட்டும் அந்த காட்சியில் அவர் காவலாளியுடன் நடத்தும் உரையாடல். இந்த ஒட்டுமொத்த காட்சியிலும் தோழர் ஜனநாதன் எடுத்தாண்டிருப்பது “அந்நியமாதல்” என்னும் நிகழ்வு.

“மார்டன் டைம்ஸில்” சார்லி சாப்ளின் அந்நியமாதலை மிகவும் சிறப்பாக விளக்கியிருப்பார். ஆலையில் “திருகு” சுழற்றும் காட்சி, பணியாளர்களின் உணவு நேரத்தைக் கூட உழைப்பு நேரமாக மாற்ற ஒரு இயந்திரம் மூலமாக உணவு ஊட்டுவார்கள். தன் உழைப்பிற்கும் அதன் விளைவிற்கும் தொடர்பற்றவராக மாற்றப்படும் ஒரு தொழிலாளிக்கு நிகழும் அந்நியமாதல் ஒரு பக்கம் உழைப்புச் சுரண்டலுக்காக முதலாளித்துவம் எந்த எல்லைக்கு செல்லும் என்னும் பகடி இன்னொரு பக்கமாக அந்த காட்சி இடம்பெற்றிருக்கும்.

ஜனநாதன் தோழரும் இதைத்தான் அந்த ஆலைக் காட்சியில் விளக்குகிறார். இந்த மண்ணின் கல்வி அறிவு, அரசியல் புரிதலை மனதில் கொண்டு அவர் அதைப் பேச்சு வடிவிலேயே கையாண்டிருக்கிறார். கரும்பு விவசாயிகளுடனான உரையாடல் மூலமாக அவர் மக்களுக்கு தானே அந்த தகவல்களைத் தருகிறார். திரையில் தோன்றும் கதாபாத்திரங்கள் மூலம் அந்த பாடத்தை நடத்துகிறார்.

வர்க்கப் போராட்டத்தில் தொழிலாளர்கள் ஏன் ஆயுதம் ஏந்தும் நிலை வருகிறது என்பதுவரை தத்துவ பின்புலத்துடன் பேசத் துணிந்திருக்கிறார் ஜனநாதன். கதாநாயகத் தன்மையோடு எல்லாம் தெரிந்த அறிவுஜீவிகள் போல் உணர்ச்சிப் பொங்க எத்தனையோ ஹீரோக்கள் பேசிய போதெல்லாம் வராத விமர்சனங்கள் இந்த படத்திற்கு வருகிறது. வரத் தானே செய்யும், ஏன்னா பத்த வச்சுட்டாருல்ல ஜனநாதன்.

லாபம் படம் பற்றி வரும் “ஜனரஞ்சக” விமர்சனங்களைப் புறக்கணித்து உழைக்கும் மக்களின் (நமக்காக) விடுதலைக்காக எடுக்கப்பட்ட லாபம் திரைப்படத்தைக் கண்டு கற்று வெற்றிப் படமாக்குவோம்.




*சூரியன் களவாடப்பட்ட பூமியில்*
*ஊர்ந்து திரிந்த பாதி நிலவும்,*
*நட்சத்திரப் பூச்சிகளும்*
*வேட்டையாடப்பட்டபின்*
*இருண்மையின் ஆள்கையில்*
*சிக்கிக் கிடந்தன பட்டினங்களும்*
*தாணையங்களும்.*

*கலட்டித்தரையின் ஓர் ஓரத்தில்*
*தோண்டியெடுத்த*
*உவர்ப் புழுதியில்*
*வியர்வைகளைக் கொட்டி*
*சூரியனின் சாயலிலும்,*
*நிலவின் வெப்பத்திலும்*
*நட்சத்திரங்களின் வெளிப்புமாக*
*ஓர்*
*வட்டத்தைச் செய்து*
*வானவெளியில் மிதக்கவிட்ட*
*அடுத்த கணம்*
*தூரத்தில் கேட்கிறது*
*சைனியங்களின் பேரொலி.*

*இன்னொரு*
*படையெடுப்பும் முற்றுகையும்*
*அபகரிப்பும்*
*நெருங்கி வருவதை*
*குதிரையடி எக்காளம்*
*கூவிச் சொல்கிறது.*

# SPORT



Bergen Vest விளையாட்டுக் கழகத்தின் ஒழுங்கமைப்பில் Vestland hallen உள்ளரங்க மைதானத்தில் "BERGEN VEST CUP 2021" உதைபந்தாட்டப்போட்டி கடந்த 18 செப்டம்பர் அன்று மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

நோர்வேயின் பல பாகங்களில் இருந்தும் 11 உதைபந்தாட்ட அணிகள் கலந்து சிறப்பித்தனர். போட்டிகள் அனைத்தும் மிகவும் விறுவிறுப்பாகவும், சிநேகப்பூர்வமாகவும் நடைபெற்றன.

இறுதியாட்டப் போட்டியில் Unique A - Tiki Taka Rumba அணிகள் மோதின.

இந்த ஆட்டத்தில் 6 - 3 கோல்களால் Unique A அணி வெற்றியீட்டி கிண்ணத்தைத் தட்டிக் கொண்டது.










# படங்களோடு பேசுதல்...

**திருச்செல்வம் திருச்சிற்றம்பலம்**
நாயன்மார்க்கட்டு, நோர்வே (Bergen - Norway)

**நீள நெடும் பயணி.**
**இயற்கை அழகினை தங்கித் தரித்து நின்று அள்ளிப் பருகி**
**ஆறஅமர காதலோடு இரசிக்கும் ஒரு இரசிகன்.**
**அதனாலேயே இவன் கலைஞன்.**



பாடசாலைப் பருவத்திலிருந்தே படத் தபாலட்டை (Picture Postcard) சேகரிக்கும் ஆர்வம் அதுவே இயற்கைக் காட்சிகளின் மீதான உவகையை ஏற்படுத்தியது. இந்த உவகை இயற்கைக் காட்சிகளின் மீதான ஈர்ப்பையும், இரசனையையும் மனதுள் வியாபிக்கச் செய்கிறது.

1984ம் வருடம் நோர்வே நாட்டுக்குப் புலம் பெயர்ந்த பின்பு கிடைக்கப்பெற்ற கமெராவின் ஊடாக இயற்கையின் எழிலைத் தானே விரும்பியபடி சட்டகப் படுத்திக் காண்கிறார். தவிர்க்கவியலாதபடி அதுவே இவரது தேடலும், இரசனையும், படைப்பாகவும் பரிணமிக்கின்றது.

"நள்ளிரவுச் சூரியதேசம்" என அழைக்கப்படும் நோர்வே நாட்டின் அழகு மிளிரும் நகரங்களில் ஒன்று "மலைகளின் அரசி" என வர்ணிக்கப்படும் பேர்கன் நகரம். சூழவும் மலைகளுக்கும், அருவிகளுக்கும், நீர் வீழ்ச்சிகளுக்கும், பனித்திடல்களுக்கும், பசிய காடுகளுக்கும், அட்லாண்டிக் அலைகள் வந்து தொட்டுச் செல்லும் கரைகளுக்கும், வடதுருவத்துத் தொன்மைக்குடிகளின் மிச்சம் மீதிச் சுவடுகளுக்கும் ஊடே காதலோடு குடியிருந்துகொண்டு இயற்கையை இரசிக்கவில்லையெனில் அது மனித மனமா என்ன?

இயற்கையிலேயே இயற்கையை நேசிக்கவும், இரசிக்கவும் முடிந்த இந்தக் கலைஞனுக்கு இதைவிட வேறென்ன வேண்டும். அதுவும் புகைப்படக் கலையைத் தனக்கென வரித்துக் கொண்ட ஒரு கலைஞன்.



நீண்டகாலமாக இவரது படங்களைப் பார்த்து இரசித்துக் கொண்டிருக்கிறேன்.

பல சந்தர்ப்பங்களில் இவரது படங்கள் பற்றி இவரோடு நிறையவே கருத்துப் பரிமாறல்கள் செய்திருக்கிறேன். கடந்த சிலவாரம் இவர் எந்த மலைச்சாரலுக்குப் பயணித்தார்?, போன கோடைக்கு இவர் எந்த நாட்டின் கடற்கரையில் உலவினார் என்பதையெல்லாம் இவரது புகைப்படங்கள் பற்றிய பதிவுகளைப் பார்த்தே நாம் அறிந்து கொள்ள முடியும் இயற்கையின் அழகை மொன்று பருக தான் பயணிக்கும் இடமெல்லாம் கூடவே கமெராவையும், காதலையும் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டுதான் பயணிப்பார்.

தான் காணும் உலகங்களை, தான் மட்டும் இரசிப்பதோடு நின்றுவிடாமல், அவற்றைப் புகைப்படங்களாகப் பதிவு செய்து நண்பர்களோடு பகிர்ந்துகொள்ளும் அந்த மனம் எனக்குப் பிடித்திருக்கிறது.

சரி, இனி இவரின் படங்களின் நுட்பங்கள் சிலவற்றைப் பதிவு செய்யலாமென விரும்புகிகிறேன்.
"Journal Photography"யின் அம்சங்களே இவரது படங்களில் சிறப்புச் சேர்க்கிறது.
1- தான் காணும் இயற்கையின் அழகுகளைப் பளிச்செனப் பதிவு செய்வது.
2- காட்சிகள் எங்கணும் இயற்கையின் வெளிச்சம் பரத்திவிடப் பண்ணுவது.
3- இயற்கை வெளிச்சத்தை முடிந்தளவு தான் பதியும் காட்சிகளின் மூலைமுடுக்குகளெல்லாம் பயன்படுத்துவது.
அதேவேளை காட்சிகளில் புலப்படும் மடிப்புகளின் கோடுகள், கோலங்கள் சிதையாத வண்ணம் ஒளியை சட்டகத்துள் வரவிடாமல், தகுந்த இடத்தில் தவிர்ப்பது.
இந்த உத்தியை இவரது பெரும்பாலும் படங்களிலும் நாம் அவதானிக்கலாம்.
இருள்வெளிதான் புகைப்படக் கலையின் மூலம். இதைக் கையாள்வதில் ஒவ்வொரு கலைஞர்களும் வேறு படுவார்கள். அந்த வேறுபாடு அவரவர் இரசனையின்பால் கட்டமைப்பதும், தேர்வு செய்வதுமாகும். இவரைப் பொறுத்தவரை தான் இரசிக்கும் காட்சிகளை ஒளிவுமறைவின்றி முழுவதுமாகக் கண்டுணர்ந்து இரசிக்க விரும்புகிறார். அதையே படைப்பாக்கவும் செய்கிறார். அந்தப்



படைப்பையே தான் சார்ந்த, தான் நேசிக்கும் சமூகத்தோடும் பகிர்ந்துகொள்ள நினைக்கிறார். இன்றைய கணினியுகத் தொழில் நுட்பங்களை புகைப்படக் கலைக்கு இவர் பயன்படுத்தி வருகின்றபோதும், தன்னால் பதிவு செய்யப்படும் படங்களில் கிடைக்ககூடிய அசல் வண்ணங்களை அந்தப்படிக்கே வெளிப்படுத்துவதையே கடைப்பிடித்து வருகிறார். இந்த வகையிலேயே இவரது படைப்புக்கள் தனக்கான ஒரு சிறப்பிடத்தைப் பிடித்து நிற்கிறது.



இவரது படங்களைப் பார்க்க நேரும்போது எனது இரசிகமனம் சில திருட்டு வேலைகளையும் செய்து பார்க்கும். அதாவது இவரது சில படங்களைக் கறுப்பு வெள்ளையில் பார்த்து இரசிக்கத் தோன்றும் அப்படி சில படங்களைக் கறுப்பு-வெள்ளையாக்கி நான் மட்டும் இரசித்திருக்கிறேன் என்பதையும் இப்போது பதிவு செய்கிறேன்.
இதை அவரிடமும் சொல்லியிருக்கிறேன்.

ஒரு படைப்பாளி தனது படைப்பை எப்படி வெளிப் படுத்துகிறாரோ, அந்தப்படிக்கேதான் நாம் பார்க்க வேண்டும் என்றபடிக்காக ஏதாவது எழுதாச் சட்டம் இருக்கலாம், ஆனால் நாம் நமக்கு மட்டாக நெளிவு சுழிவுகளை செய்து பார்ப்பதில் என்ன பங்கம் நேர்ந்து விடப் போகிறது?

சரி நண்பர்களே, அடுத்த இதழில் இன்னொரு புகைப்படக் கலைஞருடன் சந்திப்போம்.

அன்புடன் தமயந்தி-

# இராட்சத தொட்டாச் சுருங்கி எங்கள் காலடிக்கு வந்துவிட்ட, ஆக்கிரமிக்கத் துடிக்கும் அபாயம்.



**- ஏ.எம். றியாஸ் அகமட்**
*(சிரேஸ்ட விரிவுரையாளர்,
தென்கிழக்கு பல்கலைக்கழகம், இலங்கை)*

Mimosa pigra (Giant sensitive plant) (giant mimosa), இராட்சத தொட்டாச்சுருங்கி (கட்டுகஸ் (சிங்களம்) இலங்கையில் அறிமுகம்செய்யப்பட்ட வித்துக்களைக்கொண்டு இனம்பெருக்கும், 4 - 6 மீற்றர் உயரம் வரை வளரும், வளைந்த கூரான முட்களைக் கொண்டுள்ள மெக்சிகோ, தெற்கு வெனிசுவெலா, மற்றும் மத்திய அமேசன் பள்ளத்தாக்குப் பிரதேசங்களை பூர்வீகமாகக் கொண்ட, உலகத்தின் மிக மோசமான முதல் 100 அந்நிய ஆக்கிரமிப்புத் தாவரங்களுக்குள் அடங்கும் தாவரம் அல்லது பல்லாண்டு செடி அல்லது சிறிய மரமாகும் ஆனால் ஆபிரிக்காவில் இந்த மரங்கள் சுமார் 200 வருடங்களாகவே காணப்படுகின்றது.

புதிய பிரதேசங்களில் இந்தத் தாவரங்கள், அலங்காரத் தாவரங்களாக, நிலத்தோற்றத்தை விருத்திசெய்ய, மண்ணரிப்பைத் தடுத்தல் போன்ற பல காரணங்களை நோக்கமாகக் கொண்டு அறிமுகப்படுத்தும் நோக்கமாகவோ அல்லது தவறுதலாகவோ இந்தத் தாவரங்கள் அறிமுகப்படுத்தப்பட்ட நாடுகளில், இவை சிக்கலான விவசாய, சுற்றுச்சூழல், பொருளாதார பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளன.

இதன் பூர்வீக நாடுகளில், இந்தத் தாவரங்களினால் ஏற்பட்ட பிரச்சினைகள் மிகவும் குறைவாகும். இந்தத் தாவரங்கள் இரண்டு மீற்றருக்கும் குறைந்த உயரமுள்ள சிறிய பற்றைகளாக அங்கொன்றும் இங்கொன்றுமாகவே காணப்படுகின்றது.

ஆபிரிக்க, ஆசிய, சில பசுபிக் தீவுகள், அவுஸ்தரேலியாவின் வட பிராந்தியங்கள் போன்றவைகளில் இந்தத் தாவரங்கள் மிகவும் ஆக்ரோசமாக உயரமாகவும், அடர்த்தியாகவும், பாரிய நிலப்பரப்பை பிடித்தும் வளர்ந்து, சுதேசிய இயற்கையான உயிரின பல்வகைமைக்கு அச்சுறுத்தலாக இருக்கின்றன.

இந்த அந்நிய ஆக்கிரமிப்பு தாவரமானது, இலங்கையின் மத்திய மாகாணத்தின் மகாவலிக் கங்கையின் கரைகளிலேயே 1997ம் ஆண்டு முதன் முறையாக அடையாளம் காணப்பட்டது. அப்போது மகாவலிக் கங்கைகளின் கரைகளை உறுதிப்படுத்த இந்தத் தாவரங்கள் உதவுவதாகக் கருதப்பட்டன. இருந்தும் தொடர்ச்சியான கவனையீனம் காரணமாக, இந்தத் தாவரங்கள் 1 கிலோ மீற்றர் அகல, சுமார் 20 - 25 கிலோமீற்றர் நீள அளவிற்கு மகாவலிக் கரைகளின் வழி நெடுக அப்போது காணப்பட்டன. இரண்டாயிரம் ஆண்டளவில் இலங்கையின் 4மாவட்டங்கள், 3மாகாணங்கள், 4விவசாய சூழலியல் வலயங்கள் உள்ளடங்கலாக 46வலயங்களில் மிக வேகமாகப் பரவியிருந்தது. அத்துடன் 2017ம் ஆண்டளவில் மகாவலியின் மேல் நீரேந்து பகுதிகளில், 30 - 35 கிலோமீற்றர் தூரத்திற்கு தெளிவாக தெரியுமளவிற்கு பரவியிருக்கிறது. மகாவலி நதிக்கரையைத் தவிர, கைவிடப்பட்ட வயல்வெளிகள், ஆறு, கரைகள், வீட்டுத் தோட்டங்கள், வீதியோரங்கள். நீர்வழிகள், பதிய கட்ட வேலைகள் நடக்கும் ஸ்தானங்கள் போன்றவைகளிலும் தற்போது பரவிக் காணப்படுகின்றன.

1980ம் ஆண்டுகளின் ஆரம்பங்களிலிருந்தே இந்தத் தாவரங்கள் குடியேற ஆரம்பித்தன. விவசாய நிலங்கள், கைவிடப்பட்ட நிலங்கள், இயற்கை வன ஒதுக்குகள் போன்ற சூழற்றொகுதிகள் இந்தத் தாவரங்கள் ஏற்படுத்திய எதிர்மறையான விளைவுகளால் கடுமையான சுற்றுச்சூழல் அச்சுறுத்தல்களுக்குள்ளாகின. இதனால் பயிர்ச்செய்கை நிலங்களினதும், மற்றைய நிலங்களினதும் உற்பத்தித் திறன் பாதிக்கப்பட்டதுடன், நிலங்களின் பெறுமதியும் மதிப்புக் குறையத் தொடங்கின.

இந்த தாவரங்கள் விதைகளின் மூலம் இனப்பெருக்கம் செய்கின்றன. நீரோட்டத்தின் மூலம் நீண்ட தூரத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இந்தத் தாவரத்தின் விதைகள் பரப்பப்படுகின்றன. அத்துடன் மனிதர்களின் ஆடைகள், விலங்குகள், கால்நடைகளின் தோல் உரோமங்கள், பறவைகளின் இறகுகள், வாகனங்களின் சக்கரங்கள் போன்றவைகளுடன் ஒட்டப்பட்டும் சிறியளவிலான விதைகள் பரப்பப்படுகின்றன. இந்த மரத்தின் விதைகளின் தடித்த வித்துறைகள் மண்ணினால் கீறப்படுவதன் காரணமாக (scarification) பரிகரிப்பு செய்யப்பட்ட விதைகளே, பரிகரிக்கப்படாத, மற்றும் நீரில் ஊறவைக்கப்பட்ட விதைகளைவிட அதிக முளைதிறன் கொண்டு காணப்படுகின்றன. அத்துடன், நுண்ணுயிரத்தாக்கம், வெப்பநிலை ஏற்றத் தாழ்வுகள், மண்ணரிப்பு, நீர் ஓட்டம் உபகரணங்கள் பாவனை போன்றவைகள் காரணமாகவும் தடித்த வித்துறைகளுக்கு பாதிப்பு ஏற்படுத்தப்படுவதனால், இந்த வித்துக்களுக்கு முளைதிறன் அதிகரிக்கின்றன.

வருடம் முழுவதும் பூக்கக்கூடிய, 13.4 சென்ரிமீற்றரான காய்களில் 8-20 விதைகள் காணப்படும். இதன் விதைகள் பல வருடங்களுக்கு உறங்கு நிலையிலிருந்து முளைக்கக்கூடியன. மணற்பாங்கான மணலுக்குள் இருக்கும், விதைகள் சுமார் 25 வருடங்களுக்குப் பிறகும் முளைக்கக்கூடியன. இதனையும் விட, நிலைமைகளைப் பொறுத்து இன்னும் நீண்ட காலத்திற்குப் பிறகும் முளைக்கலாம். ஆனால் களித் தரையானது, முளைதிறனைக் குறைப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

*இத்தாவரங்களானது 12 வாரங்களுக்குப் பிறகு, 77 சென்ரிமீற்றர் உயரத்தை அடைந்தவுடன், பூக்கத் தொடங்குகின்றன. ஆரம்பத்தில் இரு பூக்களுக்கு மேல் உருவாக்காது. அத்துடன் விதைகளையும் உருவாக்காது. 18 வாரங்களுக்குப் பிறகே காய்கள் காய்க்கத் தொடங்கி, விதைகள் உருவாகத் தொடங்கும். அப்போது 4 பூக்களுக்கு மேல் பூக்காது. ஆரம்பத்தில் மெதுவாக வளரும் இத்தாவரங்களானது, 8-12 வாரங்களுக்குப் பிறகு, ஒரு நாளைக்கு 2.4 சென்ரிமீற்றர் வேகத்தில் வளரக்கூடியன. வேர்களின் வளர்ச்சியும் 12- 18 வாரங்களில் அதிகளவாக காணப்படும். இத்தாவரத்தின் பரம்பலுக்கு, ஆறுகளின் ஓடும் நீரே முக்கிய காரணமாகும். அத்துடன் நாடு தழுவிய பரம்பலுக்கு, கட்டட வேலைகளுக்காக வாகனங்களில் மண் ஓரிடத்திலிருந்து நாட்டின் பல பாகங்களிற்கும் கொண்டு செல்லப்பட்டமையே மிக முக்கிய காரணமாகும்.*

**இராட்சத தொட்டாச்சுருங்கியினால் பூர்வீக இனங்களுக்கும், வாழிடங்களுக்கும் ஏற்பட்ட பிரச்சினைகள்:**

*மேய்ச்சல் நிலங்களை, குறிப்பாக வெள்ளப் பள்ளத்தாக்கு சமவெளிகளில் குறைத்துள்ளன. அத்துடன் உயிரியல் பல்வகைமைக்குரிய வாழிடங்களின் அளவையும் குறைத்துள்ளன. நீர்ப் பாதைகளைத் தடைசெய்து, பிரயாணத்திற்கும், மீன்பிடிக்கும் தடையாய் இருப்பதுடன், மனிதர்கள் தங்களின் நாளாந்த குளித்தல், கழுவுதல், நீந்துதல் போன்ற தேவைகளை நிறைவேற்றவும் தடையாயிருக்கின்றது. இராட்சத தொட்டாச்சுருங்கியானது, வனசீவராசிகளின் உணவுத் தேவைநிறைவேற்றும் இடங்களை ஆக்கிரமித்து, அந்த இடங்களிலுள்ள வன விலங்குகளையும் வேறு இடங்களுக்கு துரத்தியுள்ளன. இயற்கையான நீர் வரத்து பாதைகளையும், நீர்ப்பாசனப் பாதைகளையும் தடைசெய்து அங்கு இருந்த பூர்வீக இனங்களுக்கும் பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளன. மருத மரங்கள் இயற்கையாகவே நீர்த் தொகுதிகளின் கரைகளில் விதைகளாகப் பரம்பி, நாற்றுக்களாகி மரங்களாக வளர்ந்து வெள்ளப்பெருக்கை கட்டுப்படுத்தும். ஆனால் இந்த இராட்சத தொட்டாச் சுருங்கித் தாவரங்கள் இந்த மருத மரங்களை வளரவிடாது, வெள்ளப்பெருக்கையும் அதிகரித்துள்ளன. அத்துடன் பூர்வீக இனத்தாவரங்களை அழித்து, தான் மட்டும் மிக அடர்த்தியான முள்நிறைந்த பற்றைகளாக வளர்ந்து, விலங்குகளும், மனிதர்களும் உள்நுழையாதவாறு பல தடைகளையும் ஏற்படுத்தியுள்ளன.*

**இராட்சத தொட்டாச்சுருங்கியைக் கட்டுப்படுத்தல்:**

*இராட்சத தொட்டாச்சுருங்கியை பல்வேறு முறைகளில் பல்வேறு நாடுகளில் கட்டுப்படுத்துகின்றார்கள்.*

***பொறிமுறை கட்டுப்பாடு:*** *பற்றைகளாக அல்லது அடர்த்தியாக வளராத, அங்கொன்றும் இங்கொன்றுமாக காணப்படும் தாவரங்களை, வெட்டி, வேரோடு பிடுங்கி எரித்துவிடலாம். இந்த முறையானது நிறைய மனிதவலுவை வேண்டிநிற்பது. இந்த முறையில் தாவரங்களைக் கட்டுப்படுத்தும்போது, இந்த தாவரத்தின் விதைகளின் தடித்தவித்துறை நீக்கப்பட்டு, முளைதிறன் அதிகரிப்பது குறிப்பிடத்தக்கதாகும்.*

***இரசாயன முறை:*** *இரசாயன முறையில் கட்டுப்படுத்தும்போத சுற்றுச்சூழல் பாரியளவில் மாசடைகின்றது. கிளைபொஸ்பேற் களைநாசினியானது, தாவரத்தின் வாழ்க்கைவட்டத்தின் வெவ்வேறு நிலைகளில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. நான்கு மாதங்களுக்கு ஒரு முறை, மூன்று முறை 1.44 கிலோகிராம் கிளைபொஸ்பேட்டை ஒரு ஹெக்டேயருக்கு விசிறும்போது, 6 மாத வயதுள்ள கன்றுகளை, இந்த களைநாசினியானது மிகத் திறமையாக கட்டுப்படுத்தியதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அவுஸ்தரேலியாவில், கிளைபொஸ்பேட் களைநாசினியானது, வான்வழி விசிறல் மூலம் இத்தாவரங்களை கட்டுப்படுத்தியுள்ளது. ஆனால் தரைவழி விசிறல் மூலம் சிறிய பரப்புள்ள தாவரங்களையே கட்டுப்படுத்தலாம். இரசானப் பொருட்களைப் பாவித்து இந்தத் தாவரங்களைக் கட்டுப்படுத்தும்போது, இரசாயனப் பொருட்கள் நீர்ச் சூழற்றொகுதிகளையும், அதன் உயிரினங்களையும் பாதிப்பிற்குள்ளாக்கும்.*

*எரித்தல் இளம், மற்றும் முதிர்ந்த மரங்களை எரித்துக் கட்டுப்படுத்தல் மிகவும் கடினமானது. வேர்களுடன் பிடுங்கி. அவைகளை வெயிலில் உலர்த்தினாலேயே தாவரங்களை முற்றாக எரிப்பது இலகுவானதாக இருக்கும். இருந்தும் இவ்வாறு எரிக்கப்பட்டாலம், எரிக்கப்பட்டு மீதமான தண்டுகளிலிருந்தும், மற்றும் விதைகளிலிருந்தும் புதிய தாவரங்கள் விருத்தியாவது அவதானிக்கப்பட்டுள்ளது. எரித்தலானது, வித்துக்களின் உறங்குநிலையை நீக்கி, முளைதிறனை அதிகரிக்கச் செய்கின்றன என்றும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இருந்தும் எரித்தலினால் ஏற்படும் உயர்ந்த வெப்பநிலையினால் ஒரு பகுதி விதைகள் அழிக்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது.*

*பயிராக்கவியல் முறைகள்: இராட்சத தொட்டாச்சுருங்கியானது இளம் நிலைகள் காணப்படும் பகுதிகளில்* Panicam maximum *எனப்படும், கினியா அல்லது மானா புற்கள் ஒரு சதர மீற்றரில் 16 புற்கள் காணப்பட்டால் மிகவும் வினைத்திறனாக இராட்சத தொட்டாச்சுருங்கித் தாவரங்கள் கட்டுப்படுத்தப்படுகின்றன என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஒரு மாத வயதுள்ள கினியா அல்லது மானா புற்களின் நாற்றுக்கள், இராட்சத தொட்டாச்சுருங்கியின் விதைகள் முளைப்பதனை தடைசெய்கின்றன. கினியா அல்லது மானா புற்களுடன் இராட்சத தொட்டாச்சுருங்கியானது போட்டியிட முடியாமல் பின்வாங்குகின்றன. ஆனால் கினியா அல்லது மானா இலுக்கு புற்களும் இலங்கையில் அந்நிய ஆக்கிரமிப்பு தாவரமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. ஏனெனில் இந்த புற்கள் இலங்கையில் 18ம் நூற்றாண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட இலங்கையின் மேய்ச்சல் தரைகளிலும், புன்னிலங்களிலும் காணப்பட்ட இந்தத் தாவரங்கள் மனித முகாமைத்துவத்தின் கட்டுப்பாட்டிலிருந்து வெளியேறி, இலங்கையெங்கும் தரிசு நிலங்கள், உலர் பற்றைகள், புல்வெளிகள், விவசாய*

*நிலங்கள் போன்ற சூழற்றொகுதிகளில் பரவி அந்நிய ஆக்கிரமிப்பு தாவரமாக மாறியுள்ளது. ஒரு அந்நிய ஆக்கிரமிப்பு தாவரம் ஒன்றை இன்னொரு ஆக்கிரமிப்பு தாவரமொன்றினால் அழிக்கும் போது, நிலைமை மேலும் சிக்கலான ஒன்றாக மாறிவிடும் நிலைமை காணப்படுகின்றது.*

*இந்தத் தாவரங்கள் நிழலான பகுதிகளில் வளர்ச்சி குறைவாகக் காட்டுவதனால், மருத மரங்களை கரைகளில் நட்டு, நிழலை ஏற்படுத்தி கட்டுப்படுத்தலாம் கிளிசிறிடியா நடுவதன் மூலமும் இந்தத் தாவரங்களை கட்டுப்படுத்தலாம் என ஒரு ஆய்வு தெரிவிக்கின்றது. சோளத்தினதும், பயறினதும் முளைதிறன் சுட்டெண்ணும், இராட்சத தொட்டாச்சுருங்கியின் சுட்டெண்ணும் ஒரே அளவாக இருப்பதனால், இந்தத் தாவரங்கள் இருக்கும் பிரதேசங்களில் சோளப் பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ளலாம் எனவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.*

**உயிரியல் கட்டுப்பாட்டு முறைகள்:** *அவுஸ்தரேலியாவில் இராட்சத தொட்டாச்சுருங்கி தாவரங்களை அந்த நாட்டின் பூர்வீக தாவரங்களான Hymenachne acutiglum, Oryza autralensis போன்றவை கட்டுப்படுத்துகின்றன. வேறு நாடுகளில் இந்தத் தாவரங்களில் இலைகளை உண்ணக்கூடிய பலவகையான கிறிசொமெலிட் வண்டினங்கள் காணப்படுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.*

*இராட்சத தொட்டாச்சுருங்கிபோன்ற அந்நிய ஆக்கிரமிப்பு தாவரங்கள், விவசாய நடவடிக்கைகளில் பாதிப்பை ஏற்படுத்தல், விவசாய நிலங்களின் உற்பத்தித் திறனைக் குறைத்தல், சுதேசிய, பூர்வீக, உள்நாட்டு இனங்களுக்கு வளப் பங்கீடுகளுக்கான போட்டிகளை ஏற்படுத்தி அவைகளை அழித்தல், உயிர்ப்பல்வகைமையின் அளவைக் குறைத்தல், அபாயத்தை எதிர்நோக்கியிருக்கின்ற தாவரங்கள் மற்றும் விலங்குகளின் இருப்புக்கு அச்சுறுத்தலாக இருத்தல், காடுகளின் கட்டமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்தல், எங்களின் இயற்கையான சூழலுக்கு தேவையான இனங்களின் மீளுருவாக்கம் மற்றும் வளர்ச்சிக்கு இடையூறாக இருத்தல், சூழல்தொகுதியின் பல்வேறு இயக்கங்களுக்கு இடையூறாக இருத்தல், தாவர, விலங்குகளின் இயற்கையான வாழிடங்களின் அமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்தல், நெருங்கிய உள்ளூர் இனங்களுடன் மரபணு கலப்பை ஏற்படுத்தி. மரபணு மாசை உண்டாக்கல், போசணை வட்டத்தில் மாற்றங்களை ஏற்படுத்தி உயிரினங்களின் வாழ்க்கை வட்டங்களுக்கு இடையூறுகளை ஏற்படுத்தல், காடுகள், சாலையோரங்கள், ரயில் போன்றவைகளில் விபத்துக்களை ஏற்படுத்தலும் (தீ பரவல்), சேதங்களை ஏற்படுத்தல், நீர்ப்பாசன நடவடிக்கைகளில் பாதிப்பு, மீன்பிடி, வாழ்வாதார நடவடிக்கைகளுக்கு பாதிப்பு, நீர் நிலைகளை மனிதர்கள் பாவிப்பதில் தடைகளை ஏற்படுத்தல், மனித உடல் நலத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தல், சூழலின் அழகைப் பாதித்தல், கட்டுப்படுத்துவதற்கு அதிக செலவையும் ஏற்படுத்தல் உட்பட மேலும் பல பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன.*

**மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் பரவல்:** *மட்டக்களப்பு மாவட்டத்தின் வெல்லாவெளி பிரதேச செயலகப் பிரிவின், மண்டூர், பாலமுனை, தம்பலவத்தை, மற்றும் அந்தலோயா நதியின் கரைகள், இரு மாவட்ட எல்லைகளிலும் காணப்படுகின்றன. பின்னர் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து தெற்கு நோக்கி, அம்பிலாந்துறை - வீரமுனை வீதியூடாக நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவுக்குள் பரவத் தொடங்கியிருக்கின்றன. அத்துடன் பட்டிப்பளை பிரதேச செயலகப் பிரிவின் பல இடங்களிலும் மிகவும் அடர்த்தியாகவும் காணப்படுகின்றன. மட்டக்களப்பு மாவட்டத்தின் இந்த பிரதேச செயலகப் பிரிவுகள் எதிர்நோக்கும் முதன்மையான சுற்றுச்சூழல் பிரச்சினையாக இந்த அந்நிய ஆக்கிரமிப்பு தாவரம் உருவாக்கும் பிரச்சினைகள் முக்கியத்துவப்படுத்தப்பட்டுள்ளன. இந்த மாவட்டங்களில் 2012ம் ஆண்டு பாரிய வெள்ளத்தின் மூலம் தென்னிலங்கையிலிருந்து இந்த மரத்தின் விதைகள் கொண்டு வரப்பட்டு இந்த மரங்கள் பரப்பப்பட்டிருப்பதாக பொது மக்களும் விவசாயிகளும் தெரிவிக்கின்றார்கள்.*

*கட்டுரையாளர் தொடர்ச்சியாக ஏற்படுத்திய விழிப்புணர்வு காரணமாக, இந்தப் பிரதேச செயலகங்களின் பிரதேச செயலாளர்கள், தங்களது உத்தியோகத்தர்களின் மூலம் இந்தத் தாவரங்களை படிப்படியாக அழிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். கட்டுரையாளரும், அவருடைய மாணவர்களும், இந்தத் தாவரங்களை வினைத்திறனாக கட்டுப்படுத்துவது சம்பந்தமான ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றார்கள். இந்த ஆய்வுகளில், இந்தத் தாவரங்கள் களுதாவளை, மருதமுனைப் பகுதிகளில் வீடுகளில் இயல்பாக வளர்ந்து காணப்படுகின்றன என்பது அறியப்பட்டிருக்கின்றது. இந்தத் தாவரங்களின் தீமை பற்றிய எந்த விடயங்களும் வீட்டுக்காரர்கள் அறியாமல் இருக்கிறார்கள். அத்துடன் இந்தத் தாவரங்கள் கட்டட வேலைகளுக்காக தூர இடங்களிலிருந்து கொண்டு வரப்பட்ட மண்ணிலிருந்த விதைகளின் மூலம் இந்தத் தாவரங்கள் பரம்பப்பட்டிருக்கின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.*

**பொதுமக்களுக்கான விழிப்புணர்பு:**

*இலங்கை போன்ற வறிய நாடுகளில் இதனைக் கட்டுப்படுத்துவது இலகுவான காரியமல்ல. ஏனெனில் இதனைக் கட்டுப்படுத்துவற்குரிய நிதி வசதிகளும், மற்றைய வசதிகளும் குறைவு. இதன் காரணமாக இராட்சத தொட்டாச்சுருங்கி தாவரங்களை அரசாங்கத்தினாலோ அல்லது தனியாரினாலோ இலகுவாக கட்டுப்படுத்த முடியாது. இதனை வினைத்திறனாக கட்டுப்படுத்துவதற்கு, பொதுமக்கள் பங்கேற்பு மிக முக்கியமானதாகும். திட்டமிடல் தொடக்கம் மரங்களை அழித்து, அந்த இடங்களில் சுதேசிய மரங்களை நடுதல் வரை பொதுமக்களின் பங்கேற்பு இருத்தல் வேண்டும். இதற்கு பொது மக்களுக்கும், மற்றவர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். விழிப்புணவை ஏற்படுத்தும் முகமாக, இத்தாவரங்கள் பற்றிய துண்டுப் பிரசுரங்கள், சிறு நூற்கள் போன்றவை பொது மக்களிடையே விநியோகிக்கப்பட்டு, பல்வேறு மட்டங்களிடையே கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகள் ஏற்பாடு செய்யப்பட வேண்டும். அத்துடன் ஒரு தாக்கமான இயக்கமாக பொது மக்கள் பங்கேற்புடன் இவை எடுத்துச் செல்லப்பட வேண்டும்.*

*உயிரியல் களைக் கட்டுப்பாட்டிற்கு ஏதாவது வாய்ப்புக்கள் இருக்கின்றனவா என்பது அரசசார்பற்ற நிறுவனங்களின் துணைகொண்டு ஆய்வுசெய்யப்பட வேண்டும். இலங்கையைப் பொறுத்தவரை மேலே கூறிய அனைத்து களைக்கட்டுப்பாடுகள் இணைந்த (இரசாயன, பௌதிக, பொறிமுறை, எரித்தல், விழிப்புணர்வு, உயிரியல்) கட்டுப்படுத்தும் முறைகளே திறமையாக அந்நிய ஆக்கிரமிப்பு தாவரங்களை கட்டுப்படுத்துவதற்கு சிறந்த முறையாகவிருக்கும்.*

***வாழும் ஆசையால்*** - வ.ஐ.ச.ஜெயபாலன்.

பகலாய் ஒளி பெருகியும்
இரவாய் இருண்டும்
ஏழு தசாப்தம்களைத் தாண்டி
இன்னும் தொடருது என் காலம்.
*
“விடிந்தால் தாமரை
பொழுதுபட்டால் முல்லையென
எப்பவும் தேன்சிந்துமே வாழ்வு.”
இதுதான் என் ஞானம் தோழதோழியரே.
இது முது கடலின் இளமைமறாத அலை.
வாழும் ஆசையால் கல் வெடிப்பிலும்
வேரோடி மலர்கிறதே சிறு புல்.
*
இனிய என் இளமை நாண
காலம் என் கண்களைத் திறந்தபோது
நான் அதிர்ந்துபோனேன்.
உலகெனும் பந்தைய மைதானம்
சமமாக இல்லயே.
பின்னே பலர் கால்கட்டும் சுமையுமாய்.
*
“பிறப்பொக்கும் எல்லா உயிர்க்குமென”
யாழ்ப்பாணத்து தோட்ட வெளிகளில்
செங்கொடி உயர்ந்த அறுபதுகளில்
சூரியனும் நிலவும் மறுக்கபட்ட
இருவேறு உலகம் இருப்பதை உணர்ந்தேன்.
பதின்மவயசில் என் ஆன்மா அதிர்ந்தது.
*
அந்த அறியப் படாத யாழ்ப்பாணத்தில்
என்போல் படிக்கும் வயசில்
உயிர்த்த செம்மண் சிலைகளாய்
கழை பறிக்கும் சிறார்களைக் கண்டு
நானும் கொதித்தேன்.
சாதிவெறி பிடித்த தமிழருக்கெதிராய்
மீசை முளைக்கயில் ஆயுதம் தாங்கினேன்.
*
பின்னர்
யாழ் நூலகத்தை எரித்தபோது
செம்மண் தோய்ந்த
ஒடுக்கப் பட்ட சிறுவர்கள்போல
புத்தகச் சாம்பர்தோய தோய
நாமும் அழுதோம்.
சற்றுத்தள்ளி துரையப்பா அரங்கில்
ஆயுதம் தாங்கிய திமிருடன்
எம்மை நகைத்து பைலா பாடி
போருக்கு அழைத்தன
நூலகம் எரித்த சிங்கள படைகள்.
மீண்டும் நாங்கள் ஆயுதம் தாங்கினோம்.
மீண்டும் மீண்டும்
சர்வதேச மானுட அரங்கில்
சரிநிகராக வாழும் ஆசையால்தானே
ஆயுதம் தாங்கினோம்.
ஆலயம் மதுதி மட்டுமன்றி
எல்லைப் புறத்து விகாரையில்கூட
எல்லோரும் இன்புற்றிருக்கவே எழுந்தோம்.
*
இபடித்தான் தோழ தோழியரே
கல்லில் வளர்ந்த புல் பூத்ததுபோல
நம் காதலும் வீரமும் கவிதையானது. ☐

## மீண்டெழும் நாட்கள்

**டானியல் சௌந்திரன்**



கோரப்பற்களோடு
சிறகுகளை விரித்து
காற்றோடு ஆசுவாசமாய்
கலந்து நின்று
நர்த்தனமாடின.

நிசப்தம்
எங்கும் நிசப்தம்
உறுமலின்
பெருமூச்சு மட்டும்
நெருப்பாகி
ஊதித்தள்ளின
ஊழித் தீ
காற்றோடு கலந்து
பேரிடியில் கலங்கித் தெறித்தது.

நட்சத்திரங்கள்
ஒவ்வொன்றும்
உதிர்ந்து உதிர்ந்து
வர்ணமயமான வானத்தை
கரும்புள்ளிகளால்
நிறைத்தன.

இயந்திர சிறகுகளால்
வானம் மூடியது
பேரிரைச்சலை கிழித்து
ஓலங்கள் எக்காளமிட்டு
திசைகள் எல்லாவற்றையும்
கிழித்தெறிந்தன.

சிலுவை மரத்தின் மீது
ஆணிகள் மட்டும்
இரத்தக் காயங்களுடன்
ஜோதியை ஏந்தி வந்த
புத்தன்
மௌனம் காத்து
மலர்களை தூவி
அஞ்சலி செலுத்தினார். ☐




*Thea (5år )*

Vi har kjørt med bil til flere hytter. Det gøyeste var å være hytten ved bjørneparken.



*Malkia (5år)*

Vi har vært på Gol.
Vi bodde på et fint hytte, og jeg så et flagg der. Det var en stor og en liten badebasseng der. Vi badet hverdag.







*Foto: Thanoosh (13år)*

